01

The School Day Celebration Series

NUMBER 1

22 JUN 1931

GHOSHA YATRA

OR

KAURAVA GARVA BHANGAM

A HIGH CLASS TAMIL DRAMA

BY

SRI RAMAYANAM

PARUTHIYUR K. KALYANARAMA SASTRI, B.A.

1931

[... ed] [Price As. 8]

-, SIMKS, G
N31

[நவீனநாடக ரத்னமாலை] ஸ்ரீ: [நீல ரத்னம்]

ஸ்ரீ ருக்மணீ ஸத்யபாமா ஸமேத

ஸ்ரீ கோபாலக்ருஷ்ண ஸ்வாமினே நம:

2 JUN 193

கோஷ யாத்ரை

என்ற

கௌரவர் கர்வ பங்கம்

பக்தி, ஹாஸ்யரஸம் நிறைந்த ஒரு

அழகிய சிறிய தமிழ் நாடகம்

ஜகத் பிரசித்திபெற்ற ஸ்ரீ பருத்தியூர் ராமாயணம் க்ருஷ்ண சாஸ்த்ரிகள் அவர்களின் முதல் குமாரனும் பாலராமாயணம், கனகலதை, பாலபாலிகா ரகுவம்சம் முதலிய நூல்களின் ஆசிரியருமான

ஸரஸகவிதாதிநாத

ஸ்ரீ கல்யாணராம சாஸ்த்ரிகள் B. A.

இயற்றிப் பிரசுரித்தது.

எல்லா உரிமைகளும் ஆசிரியருடையதே

1931

விலை அணா 8.

67885

ஸ்ரீ ராமபா[illegible]தர்களான நமது தவத்தந்தையும்
குருநாதனுமாகிய ஸமஸ்தவித்யாபாரங்கத
ஸர்வலோக மான்ய
ஸ்ரீ ராமாயணத்யகவரதவர்ணன பவித்ரீக்ருத ரஸிகஜநஸ்லாகித
• ஸ்ரீ பருத்தியூர் ராமாயணம்
க்ருஷ்ண சாஸ்த்ரி கவிமணிகளின்
திருவருளுக்கென
அவர்களது தேனே மலரும்
திவ்யஸ்ரீ பாதாரவிந்த த்வயங்களின்
த்யானத்துடன்
இஃது
ஸமர்ப்பிக்கப்பட்டது

-, 2MKS, G
N31

2678
894.812

முகவுரை.

ஸ்ரீ ருக்மணீஸத்யபாமாஸமேதனான ஸ்ரீ கோபாலக்ருஷ்ண மூர்த்தியின் திருவருளைத் துணைகொண்டு நாம் இந்நாடகம் எழுதி வெளிப்படுத்தினோம். பால்ய முதற்கொண்டே நமக்கு நாடகங்களில் விசேஷ ப்ரியம் உண்டு. நாடகம் காவ்யங்களில் முதன்மையானது. கண்களுக்கும் காதுகளுக்கும் மனதிற்கும் உத்ஸாஹத்தையும் நிம்மதியையும் தரக்கூடியது. அதுவும் பகவத் சம்பந்தம் பெற்றிருந்தால் அதைக் காட்டிலும் மேலாக மற்றொன்றையும் மதிக்க முடியாது. ஆதலின் நாம் நாடகமெழுத முன் வந்தோம். சுலபமான நடையில்தான் இது அமைந்துளது. பாடல்களும் அப்படியே. ஸம்ஸ்க்ருதத்தின் வாசனை நிறைந்திருப்பது நாடகத்தின் இனிப்பையும் ரஸத்தையும் மேலிடச் செய்வதற்கென்று ரஸிகர்கள் சந்தேகமின்றி ஒப்புக்கொள்வார்கள். கதை சிறிதாய் இருப்பதால் அதிக விளம்பரமின்றி ஆடி ஆநந்திக்கக் கூடியதே. கீர்த்தனங்களை நாம் குறித்த ராகங்களில்தான் பாடவேண்டுமென்று அவச்யமில்லை. சங்கீத மறிந்தோர் சந்தர்ப்பத்திற்குத் தக்கபடி அமைத்துக்கொள்ளலாம். ஏதோ எழுதினோம். ஸ்ரீ ருக்மணீநாதன் க்ருபையே இதைப் பரிமளிக்க செய்யுமென்று ஸம்பூர்ணமாய் நம்பியிருக்கிறோம்.

31-3-31. ஆசிரியர்.

குறிப்பு. இதை ஆடவேண்டுமானால் நமது உத்திரவைப் பெறவேண்டும் என்றும் இந்தமாதிரி வரப்புகும் நூல்களுக்காதரவாக ஏதேனும் உதவுவார்கள் என்றும் கோரப்படுகிறது.

PREFACE

The Drama ! What a Noble art it is
That lands us in the regions of His Bliss ?

It feeds the heart and feasts the eyes and ears
Making the Hall resound with shouts and cheers.

It paints a moral, or it tells a tale
Perfecting man in every small detail.

We write this play with all our fancy neat
Hoping that it will spread a fragrance sweet.

The story is so simple and so nice
And sure it will fetch soon a worthy price.

The praise of God gets His Presence unsought
And serves to give for us much food for thought.

Jealousy here is made a laughing stock
And Patience has its matchless stately walk.

Saying this much, we leave our maiden play
In lovely hands which will enjoy it gay.

If this supplies a real timely want
We get the gift for which we fondly pant.

May Lord *Sri Krishna* and His Sacred Name
Secure for this and us a lasting fame.

31—3—31 ,, ,, The author.

Please take our permission if you wish to act this play. A small donation also may be welcome.

கோஷ யாத்ரை
என்ற
கௌரவர் கர்வ பங்கம்.

நாடக பாத்திரங்கள்.

புருஷர்கள்.

தர்மபுத்ரர் - (தர்மநந்தனர், யுதிஷ்டிரர்). பாண்டவராஜன்.
பீமசேனன் } ராஜ ஸகோதரர்கள்.
அர்ஜுனன் }
ஸ்ரீ க்ருஷ்ண பகவான் - பாண்டவர்களுக்கும் உலகத்திற்கும் தெய்வம்
நாரதர் - ஸ்ரீ க்ருஷ்ண பக்தரும், தேவகார்ய கார்யதரிசியும்.
த்ருதராஷ்டிரர் - கௌரவராஜன்.
துர்யோதனன் - கௌரவயுவராஜன், த்ருதராஷ்டிரர் குமாரன்.
துச்சாசனன் - துர்யோதனன் தம்பி.
கர்ணன் - அங்கராஜனும் துர்யோதனன் தோழனும்.
சகுனி - துர்யோதனன் மாமன்.
விதுரர் - த்ருதராஷ்டிரர் தம்பி பின்னோதரர்.
சித்ரசேனன் - கந்தர்வ ராஜன்.
தேவேந்திரன் - (மகேந்திரன்) - தேவராஜன்.
விஜயத்வஜன் - துர்யோதனன் அரண்மனைக் காவல்காரன்.
மலயத்வஜன் - ஒரு சாரன்.
சிப்பாய்கள், கந்தர்வர்கள், கோபர்கள் சூதர்தாரன் முதலியர்.

ஸ்திரீகள்.

த்ரௌபதி - பாண்டவ பத்னி.
சத்யபாமை - ஸ்ரீ க்ருஷ்ண பார்யை.
மேனகை } அப்ஸரஸ்த்ரீகள்.
திலோத்தமை }
நடி - கோப ஸ்திரீகள்முதலானவர்கள்.

நிகழ்விடம் ஹஸ்தினபுரம்,
ஆயர்பாடி, தேவலோகம், த்வைதவனம்.

ஸ்ரீ :

ஸ்ரீரஸ்து.

கோஷ யாத்ரை

என்ற

கௌரவர் கர்வ பங்கம்

கஜாநநமவிக்நாய வாக்விலாஸாயவாக்பதிம் |
ஸாம்பம்ஸ்கந்தஞ்ச ஸௌக்யாய ச்ரியைநௌமிச்ரிய:பதிம் ||

அங்கம் 1 அரங்கம் 1

சூத்ரதாரன்

(ஸம்ஸ்க்ருதத்தில் நாந்தி பாடுதல்)

நாந்தி

लक्ष्मीनाथपदाब्ज मस्तु हृदिनः सम्यक्प्रतिष्ठापितं
लावण्यामृतरम्यतन्नखरसूर्याभाभिरुल्लासितं ।
लक्ष्मीनित्यनिवासभाग्यविलसत्सौन्दर्यवाग्देवता
लीलामस्मदधीनतां नयति यद्ध्यानं जगन्मंगलम् ॥

லக்ஷ்மீநாத பதாப்ஜ மஸ்து ஹ்ருதிநஃ ஸம்யக் ப்ரதிஷ்டாபிதம்
லாவண்யாம்ருதரம்யதந்நகரஸூர்யாபாபிருல்லாஸிதம் |
லக்ஷ்மீநித்ய நிவாஸ பாக்யவிலஸத் ஸௌந்தர்ய வாக்தேவதா
லீலாமஸ்மததீநதாம் நயதியத்த்யானம் ஜகன்மங்களம் ||

(நடிபிரவேசித்துத் தமிழில் நாந்தி பாடுதல்)

ஸ்ரீராகம் ஆதிதாளம்.

பல்லவி

லக்ஷ்மீநாதன் பாதாம்புஜமே
ரக்ஷகமாகநம் மிதயத்தில் விளங்கட்டும். லக்ஷ்மீ

அனுபல்லவி

லக்ஷணங்களைப் பொழிந்திடும் தன்வெண்நக
ரவிகிரணங்கள் பரந்து மலர்ந்திடும். லக்ஷ்மீ

சரணம்

லக்ஷ்மிதன்னிடம் நிதம் நிலைத்திடும் பாக்யத்தால்
லக்ஷிதையாய் விளையாடும் ஸரஸ்வதி
எக்ஷணமும் நமக்கருள் புரிந்திட எதன்
எழில்மிகும் நினைவே செய்திடுமோ அந்த ; லக்ஷ்மீ

சூத்ரதாரன் :—(நடியைப் பார்த்து) சகி ! ரங்கநாயகி ! உன் பாக்யமே பாக்யம் ! ஜகஜ்ஜனனியாகிய ஸ்ரீ மஹா லக்ஷ்மியின் பெயரை வைத்துக்கொண்டிருக்கிறாய். நிஜமாகவும் இந்த ரங்கமென்ற நாடகசாலைக்கு நீயே எஜமானியாய் இருக்கிறாய்.

நடீ :—நாதா ! போதும் புகழ்ச்சி ! அடியாளால் என்ன ஆகவேண்டுமோ அதைச் சொல்லுங்கள்.

சூத்ர :—பார்த்தனையா நம் சபையை? எல்லோரும் பரம ரஸிகர்களாய் இங்குக் கூடியிருக்கின்றார்கள். இவர்களை இன்பஸமுத்ரத்தில் முழுக்காட்டும்படியான ஒரு நாடகம் வேண்டும். அது சிறிதாய் இருக்கவேண்டும். ரஸமும் குறையக்கூடாது. ஜகதீசன் நினைவு அடிக்கடி அதில் வரவேண்டும். ஆரம்பம் முதல் பூர்த்தி

வரையில் ஒருவரும் அசையக்கூடாது. அப்படி ஏதாவது உனக்கு ஞாபகத்தில் வருகிறதா?

நடி :—ஞாபகம் வருகிறதென்ன! நாதா! கையிலேயே இருக்கிறது. மஹான்களான நமது பருத்தியூர் ஸ்ரீ ராமாயண சாஸ்திரிகளின் முதல் புதல்வரான ஸரஸ கவி கல்யாணராம சாஸ்த்ரிகள் ஸ்ரீகரமாய் நமக்கென்றே அதை எழுதித் தந்திருக்கிறாரே?

சூத்ர :—ஓகோ! சரிசரி! கோஷ யாத்ரையா? அதுதான் உத்தமமானது. அதையே இன்றாடுவோம். எங்கே ஒரு கீர்த்தனம் சொல், பார்க்கலாம். நான் பாடலாம் என்றால் ஒரு ஸம்ஸ்க்ருத நாடகாசிரியர் புருஷர்கள் பாடுவதையும் ஸ்த்ரீகள் ஸம்ஸ்க்ருதம் பேசுவதையும் பரிஹாஸம் செய்திருக்கிறார். நீ பாடினால் எதுவும் நன்றாய் இருக்கும்.

நடி:—அப்படியே பாடுகிறேன். எதை வேண்டுமானாலும் நான் பாடலாம் அல்லவா? இது நம் நாடகத்தில் வரும் ஒரு கோப கன்னியின் விளையாட்டுப் பாட்டு. (பாடுதல்)

இந்துஸ்தான் காபி ஆதி

ஆயர்குலப் பிள்ளை ஒன்று - அது
மேயவிடும் மாடு கன்று ;
ஓயாமலே வெண்ணெய் தின்று - அது
மாயங்கள் பலவும் செய்யும்.
பாதிஙிசி வேளையிலும்—அது
ஊதிப் புல்லாங்குழலை
ப்ரீதியுள்ள கோபியர்க்குப் - பல
மாதிரியாய்ப் பாடி ஆடும்.

காட்டில் அலைந்துகொண்டே - தன்
பாட்டில் ச்ருதி மாற்றிக்கொண்டே
நாட்டை எல்லாம் அங்கிழுத்து அது
கூட்டி நன்றாய் ஆட்டிவைக்கும்.
நல்ல நல்ல ராகங்களைக்—கவி
கல்யாணராமன் கொடுக்க
கல்லும் உருக அது-ராக
மாலிகைகளைத் தொடுக்கும். (ஆயர்)

சூத்ர :—சபாஷ்: நல்ல பாட்டுப் பாடினை? இனி நீ வெண்ணெயும் விற்கலாம்.

நடீ :—அதற்கென்ன ஆக்ஷேபம்? வெண்ணெய்யும் விற்பேன். அந்த வெண்ணெய் உண்டவாயனும் அடிக்கடி என்னிடம் வெண்ணெய் வாங்க வந்திடுவார்.

சூத்ர :—அப்பாடா! இந்த மகிமை உனக்கு வந்தால் அப்புறம் என்னை நீ கண்ணெடுத்துப் பார்ப்பாயா?

நடீ :—பார்க்க மாட்டேன்தான். கண்ணனைப் பார்த்த கண் மற்றென்றையும் பார்க்குமா? கேளுங்கள் இவர் திருவிளையாடலை. (பாடுதல்)

ஜோர் ஜோர என்ற பார்வி மெட்டு

பல்லவி

பால்க்காரன் என்று பாலக்ருஷ்ணனைப்
பார்த்திடல் மோசம் பால்க்கார

அனுபல்லவி

பாலும் பட்டப் பகலாய்த் தாய்ப்
பாலும் இனி நின்றே போகும். பால்க்கார

சரணங்கள்

1. பால்வெறி கொண்டே இவர் பாலுடன் நஞ்சை உண்டு
பால்கொடுத்த பூதனைக்குப் பிறவியில்லாதடிக்க
வில்லையோ ? பால்க்கார

2. வம்பும் கம்பும் தும்புமாய் வனங்களில் மறைந்திவர்
நம்பும் கோபிமார்களைத் தன்னை நாடித்தேடச் செய்ய
வில்லையோ ? பால்க்கார

3. கபட நாடகங்கட்குக் கண்ணன்சூத்ரதர னென்று
சுபமாகக் கல்யாணராமன் ச்ருதிசேர்த்துத் தினம் பாட
வில்லையோ ? (பால்க்கார)

சூத்ர :—சூத்ரதரன் என்று எனக்குப் போட்டியாகவோ இவரைக் கொண்டுவருகிறாய்? இருக்கட்டும் இது இப்படியே. நம் நாடகத்தின் சிறப்பைச் சிறிதெடுத்துச் சொல்வாய்.

நடீ :—(பாடுதல்)

ஹரிகாம்போஜி. ஆதி.

(காக்ஷி கண் காக்ஷியே என்ற மெட்டு)

பல்லவி

நாடகமிதுவே
பாடலாடற் கினிய—நாடக

அனுபல்லவி (மூதே)

ஆடவரும் பெண்களுமாய் ஆசையுடன் தானருந்தத்
தேடறிதாகிய கொம்புத்தேனும் பாலுமாய் ஓடும். நாடக

சரணங்கள்

1. சுலபமான நடை—சுந்தர பதங்கள்
நலமே தரும் நல்லநல்ல விஷயங்கள்

கண்களுக்கிது விருந்து—கண்டுகேட்கும்
காதுகளுக் கிதமுதம்,
வாக்குக்கிது கரும்பு—மனதிற்கிதே யுல்லாஸம். நாடக

2. கல்யாணராமன் தெய்வம் கண்ணனையே பாடும்;
கல்யாணபுருஷர் கதைகளைத்தான் ஆடும்;
கல்யாண மிதைக் கேட்பதே—சபைக்
கலங்காரமிதனை நாடலே
சொல்லற்கறிய ஸர்வ மங்களங்களைத் தரும் நாடக

சூத்ர :—(பார்த்து) ஆர்யே! பார்த்தனையா ஆச்சரியத்தை? நாடகமிப்படி இருக்குமென்று நீ இன்னம் பாடி முடியவில்லை. அதற்குள் நாடக நாயகியான ஸ்ரீ த்ரௌபதீ தேவியே அதோ எழுந்து வருகின்றாளே?

நடீ :—இதென்ன இது? நாதா! கனவோ காண்கின்றீர்கள்?

சூத்ர :—நான் கனவு காண்கின்றேனோ? அல்லது இந்த த்ரௌபதிதான் ஸ்வப்னம் கண்டனளோ? எல்லாம் இப்பொழுதே ஆட்டத்தில் வெளியாகி விடுகிறது.

(இருபுறமாய் இருவரும் போதல்)

அங்கம 1. அரங்கம் 2.

இடம். த்வைதவனத்தில் ஒரு ஆச்ரமம்.
காலம். சூர்யோதயம்.

(தட்டி வாசலைத் திறந்துகொண்டு த்ரௌபதிப் பிரவேசிக்கிறாள்)

த்ரௌபதி:—(நாலு பக்கமும் பார்த்து) ஏதோ ஒரு ஸ்வப்னம் கண்டு சட்டென்று விழித்துக்கொண்டேன். நினைவின் மயக்கமே ஸ்வப்னமாய் வரலாம் என்று தெரியும். ஆனாலும் பெண்பிள்ளையானதால் தைர்யம் வரவில்லை. ஏதோ காரணமின்றிக் கவலைகொள்கிறேன். துஸ்ஸ்வப்னவிநாசகனான என் அய்யன் கண்ணன் எனக்கு இருக்கவே இருக்கின்றான். நான் ஏன் இதற்கு அஞ்சவேண்டும்? என் மன்னனை நினைத்தால் எல்லா பயமும் பறந்துபோகிறது. (பாடுதல்)

ப்யாக்-ஆதி

பல்லவி

கண்ணா! மணிவண்ணா! என்—கண்முன்வருவாய். (கண்ணா)

அனுபல்லவி

கண்ணார உன்னைக் காணாத கண்ணும் கண்ணோ? (கண்ணா)

சரணங்கள்

1. எண்ண எண்ண எண்ண எண்ணிமுடியாத
புண்ணியலீலைகள் புரியும் கருணைமழைக் (கண்ணா)
2. ஒன்றேயாகிய என்றன் உதவாப்பழந்துகிலை
மின்னும்படிப் புதிதாய் மென்மேல் விளங்கச்செய்யும் ()

3. கல்யாணராமன் போற்றும் காந்தை ருக்மணியுடன்
கல்யாணரூபனுகக் காக்ஷி கொடுத்திடவே. (கண்ணு)

(பார்த்து) அதோ என் நாதன் பீமராஜாவோ வந்து நிற்கிறது? நாதா! ஏன் ஒதுங்கி நிற்கவேண்டும்? ஸமீபத்தில் வாருங்களேன்!

பீமசேனன்:—(பிரவேசித்து) பெண்மணி! மனமார நம் மணிவண்ணனை வெகு உருக்கமாய் நீ பாடினை? காதாரக் கேட்டுக்கொண்டே நின்றேன். என்ன இருந்தாலும் உன் பக்தி எங்களுக்கு வராது. இன்னம் கொஞ்சம் பாடேன்?

த்ரௌபதி:—பாடுகிறேன்; அதற்கென்ன? என் அய்யனை எவ்வளவு பாடினுலும் எனக்கு அலுக்காது. சலிக்காது. இதுவே ஜன்மத்தைக் கடைத்தேறச் செய்யப்போகிறது. அல்லது செய்துவிட்டது. (பாடுதல்)

தன்யாசி ஆதி

பல்லவி

ஜன்ம ஸாபல்யம்தரும் ஜகதீசனை
ஜனனம் நீங்கவே பாடுவேன்.

அனுபல்லவி

மனனம் செய்தென்றுமவன் மதுரபதாம்புஜத்தை
மனதால் எடுத்துக்கண்ணில் மாற்றித்தலைமேல் வைப்பேன்

சரணம்

ஒன்றிரண்டு நாட்களோ ஓடி வந்துநம்
துன்பமனைத்தும் நீக்கித் துணைபுரிந்தான் இம்மாயன்?
நன்றியுடன் கல்யாணராமன் நாளும் துதிக்கும்
மன்னர் மன்னவன் இவனை நாம் மறப்போமோ? (ஜன்ம)

நாதா ! ஸ்வப்னமொன்று கண்டேன். அதில் நமது ஜன்ம சத்ருவான துர்யோதனன் நம்மை மறுபடி ஹிம்ஸிக்க வேண்டிச் சகுனி முதலானேரோடு துராலோசனை செய்வதாயும் ஏதோ ஒரு தீர்மானத்தோடு நம் தடாகத்தின் கரைக்கு வரப்போவதாயும் கண்டு கலக்கத்துடன் விழித்துக் கொண்டேன். இந்தக் கலக்கம் தெளியவே நம் கோபாலகிருஷ்ணனை த்யானித்துக் கீர்த்தனமும் செய்தேன். நல்லதுதானே?

பீமசேனன் :—நல்லதென்று ஒருதடவை சொன்னல் போதுமா? எவ்வளவோ நல்லது. அவன் நினைவு தானே இலேசில் வருகிறதில்லை. எதையாவது நினைத்துக்கொண்டு காலத்தை வீணுக்குவதுதானே உலகத்தில் ஸஹஜமாய் இருக்கிறது? (பாடுதல்)

பிலஹரி சாப்பு

கண்ணிகள்

கவலைகளைக் காற்றில்விடும் கருணநிதி அவனே
பவஸாகரமதைத் தாண்டிட உதவும் தெப்பம் அவனே.

இகலோகத்தை இனிதாக்கிட இறங்கி அவதாரம்
சுகமாய்ச்செய்து நமக்குச் சுகமருளினவன அவனே.

விஷம்பூசிய முலைப்பாலை விருந்தாய் உட்கொண்டு
விஷமியந்த அரக்கிக்குயர் வினைத்தந்தவன் அவனே-

அரிதாகிய ராஜசூயமகத்தில் அண்ணனுடன்
அரியாஸனந் தன்னிலுனை அமர்த்தினவன் அவனே.

கல்யாணராமன் மனதில் கமலைமெல்லப்பிடிக்க
மலரும் அவன் ம்ருதுபங்கஜசரணம் நம் சரணம்.

இருக்கட்டும். பயப்படாதே. வரட்டும் அந்தத் துஷ்டன். வேலையில்லாமல் எனது கதாயுதமும் மன்னன் அர்ஜுனன் காண்டீவமும் துருப்பிடித்துப் போகின்றன. பார்க்கிறோம் ஒருகை.

த்ரௌபதி:—எல்லாம் சரிதான். முத்தண்ணா இருக்கின்றாரே? அவர் சம்மதிப்பாரா ?

பீம:—அதற்கு நீ கவலைப்படவேண்டாம். நாங்கள் பார்த்துக்கொள்கிறோம்!! எத்தனை நாள்தான் பொறுத்துக் கொள்கிறது? இனி முடியாது" என்று சொல்லிவிட்டு பதிலுக்கு நிற்காமலே நாங்கள் போய் கார்யத்தை முடித்துவிடுகிறோம். நீயும் உன் கூந்தலை அழகாய் வாரி முடிந்துகொள்ளலாம். நல்லது. முத்தண்ணா தேடுவார். நான் போகிறேன். (போதல்)

த்ரௌபதி :—(திரைமுகம் பார்த்து) அதோ யாரோ வருகின்றானே ? யாராயிருக்கலாம்? விஜயத்வஜனாய்த் தான் இருக்கவேண்டும்.

(பிரவேசித்து)

விஜயத்வஜன் .—அம்மணி! கும்பிட்றேனுங்க. (கும்பிட்டு) நான் விசயனல்ல ?

த்ரௌபதி :—விசயனா! வா! வா! எங்கு வந்தாய்?

விஜய:—இங்கனேத்தான் வந்தேனுங்க. உங்களல்லாம் பாக்க நொம்ப ஆசைங்க எனக்கு.

த்ரௌபதி:—இப்பொழுது என்ன செய்கிறாய்? எங்கிருக்கின்றாய்?

விஜய:—எங்கிருக்கிறதுங்க? நீங்கதான் விட்டேட்டிங்களே? அந்த துர்யோதனருக்கிட்டதான் இருக்கிறேனுங்க.

இதோ பார்த்துக்கங்கோ. நம்ம தம்மராசருகொடுத்த சால்வைதான் போட்டிண்டிக்கிறேன். சக்கரையும் பாலும் தேனுமா அல்ல. உங்கதங்கக் கையாலே எங் களுக்கல்லாம் போட்டீங்க? மறக்கவா நாங்க?

த்ரௌபதி:—இப்போ நன்றாயிருக்கிறாய் அல்லவா? உனக் கென்ன குறை?

விஜய:—ஒன்றுமில்லேங்க. நீங்க முன்னம்போல் வந் தாட்ணுமின்றுதான் வேண்டிக்குறேங்க.

த்ரௌபதி:—நல்லதப்பா இருக்கட்டும். உங்கள் துர்யோ தன ராஜருக்கு இப்போ யோகம்தானே? நாங்கள் எல்லாத்தையும் கொடுத்துவிட்டு வந்துவிட்டோமே?

விஜய:—என்ன யோகங்க? யோகத்துக்கவங்க பொறக்க லேங்க. எப்பன்னுச்சிக்கும் சோகம்தானுங்க.

த்ரௌபதி:—அதென்ன அப்படிச் சொல்கிறாய் நீ? அகண் டமான ராஜ்யம். அற்புதமான போகம். அளவற்ற தனங்கள், கனகங்கள், ரத்தினங்கள். அலைமோதும் தண்டு தளவாடங்கள். அறுசுவையுடன் போஜனம். இன்னம் என்னதான் வேண்டும் என்கின்றாய்?

விஜய:—எல்லாந்தான் இக்குது. அதுக்கென்ன பண்ணற துங்க? பொறுமையல்ல பிடிங்கித்திங்குதிவங்களே? வேளேலே சோறேதுங்க? தண்ணி ஏதுங்க? (தும்பிக் கொண்டு) அது கிடக்குதுபோங்க.

த்ரௌபதி:—பொறுமையா? யாரிடத்தில்? எதற்காக? நாங் கள்தாம் இங்குவந்து ஆண்டிகளாய்ப் பரதேசிகளாய் அல்லாடுகிறோமே ? இன்னமா பொறுமை?

விஜய:—அப்படிச் சொல்லாதேங்க அம்மணி! நீங்க மகா ராஜீங்க. அந்த மஹாலச்சிமிதான் நீங்க. ராமனிக் குது அயோத்திம்பாங்க. அப்படி இக்குறீங்க. அதென்னமோ அல்லாரும் சொல்லிக்கிறுங்களே? நம்ம அர்ச்சுன ராசரு இப்படியேயல்ல மானத்துக் குப் போய்ட்டு வந்தாங்களாம். அதென்னமாங்க? இது நிஜம்தானுங்க?

த்ரௌபதி:—நிஜம்தான். உனக்காரப்பா இதை எல்லாம் சொன்னது?

விஜய—எப்படியோ தெரிஞ்சுக்கிட்டேனுங்க. நான்விசய னல்ல? எனக்குத் தெரியாமலா போய்டுங்க இதெல் லாம்? அதிருக்கட்டும் சொல்லுங்க. அங்கணே யாரோரு அம்மாங்களாம். அச்சரசுங்கராங்களே. அவங்க வந்து கூப்பிட்டாங்களாம். அவங்க கூப் பிட்டா யாரும் விடமாட்டாங்களாம். நம்ம அர்சு னரு அவங்களே உதரின்னு தள்ளிவிட்டாங்களாம்?

த்ரௌபதி :—ஆமாம். அப்படித்தான் எனக்கும் தெரி கிறது.

விஜய:—அம்மணி! இந்தச் சங்கதிங்களெல்லாம் கேட்டு நாங்களெல்லாம் குறிச்சல்லோ கூத்தாடினேம். இதெல்லாம் எங்க ராசா காதிலே பட்டாக்க அவங்க என்ன பாடு படுவாங்க? நீங்கதான் சொல்லுங்க?

த்ரௌபதி:—அவர்கள் என்ன செய்கிறுர்கள்? அவர்க ளுக்கு இதெல்லாம் தெரியுமல்லவா?

விஜய:—நல்லாத் தெரியுங்க. துடிக்கிறுங்க கடந்துக்கிட்டு. அம்மா! பிசாசு பிடிச்சிக்கிட்டுதுங்க அவங்களே. எப்

பண்ணுச்சுக்கும் அந்த சகுனியிக்குதுங்களே? அத் தோடேதான் ஒசனே. ஒண்ணும் புரியலேங்கோ! தவி யாத் தவிக்கிறுங்க போங்க. நீங்க நல்லாருப்பீங்க. (நமஸ்கரித்து) நான் போய்ட்டு வரேனுங்க.

த்ரௌபதி:—சுகமாய்ப் போய்வா.

அங்கம் 1. அரங்கம் 3.

இடம். பாண்டவர் ஆச்ரமம்.

காலம். பிற்பகல்.

(பிரவேசித்து)

த்ரௌபதி:—கனவு கண்டாலும் கண்டேன். நினைவெல்லாம் எனக்கு அதுமுதல் அந்தக் கண்ணனிடமே நிற்கின்றன. அம்மனோஹரனது சிரித்த முகமும் சிவந்த வாயும் செந்தாமரைக் கண்களும் நீலமேக சுந்தரமான திவ்யத் திருமேனியும் என் மனக்கண்முன் ஆஹா! எவ்வளவு நேர்த்தியாய்த் தோன்றுகின்றன. (பாடுதல்)

தேசிக தோடி ஆதி

பல்லவி

என்ன திவ்ய ஸேவை செய்கின்றேன்
என் நெஞ்சிலிதோ? (என்ன)

அனுபல்லவி

பன்னக சயனந்தனில் பாங்குடன் பதாம்புஜத்தை
அன்னைலக்ஷ்மி மெல்லப்பிடிக்கவே—அழகாக நான் ()

சரணங்கள்

1. என்ன நீருண்டநீரத ச்யாமன கோமள காத்ரம்? [டே
என்கண் களுக்கிதுவே பாத்ரம்—என்றெண்ணிக்கொண்

2. கன்னலும் சற்கண்டும் தேனும் கனிந்த பாகுமே கலந்த
மின்னலைப்பொழியு மமுதமாய்—என்நெஞ்சிலூர. (என்ன)

3. கல்யாணராமன் க்ஷணமும்நிற்காது கானம் செய்திடும்
கல்யாணவிக்ரஹம் இதுவே! என்ருசையாய் நான் (என்ன)

பார்த்து) என்ன கண்ணைக் கவர்ந்துகொண்டு வருகிறதே ஒரு ஜோதி ரூபம்! சூர்ய பகவானே இறங்கி இவ்வழியில் வருகிருரா என்ன?

(ஸ்ரீ க்ருஷ்ண பகவான் பிரவேசிக்கிருர்.)

ஆ! என்ன சுதினமிது! என் சரண்யனே வந்து விட்டானே! பரம கல்யாணங்கள் எல்லாம் என்னிடம் வந்து நர்த்தனம் செய்கின்றனவே. எனக்கு அழைக்கவும் பேசவும் கூட ஒன்றும் தெரியவில்லையே. இவ்வாஸனத்தை அலங்கரிக்கவேண்டும். (பரபரப்பாய் ஆஸனம் போடுகிருள்)

ஸ்ரீ க்ருஷ்ணன்:—(உட்கார்ந்துகொண்டே) சகி! பாஞ்சாலி! அதோ அந்தப் பக்கம்பார். பாமை வருகிருள்.

(ஸத்யபாமாதேவி ப்ரவேசிக்கிருள்)

த்ரௌபதி:—ப்ரபோ! இதென்ன வஞ்சனை? தம்பதிகளாய் வந்தவர்கள் சேர்ந்தே வரக்கூடாதோ? அது என்ன கண்கொள்ளாக் காக்ஷியாய் இருக்கும்! இப்பொழுதாவது சேர்ந்தே வீற்றிருங்கள். நேத்ரோத்ஸவமாய்ப் பார்க்கிறேன்.

(ஸத்யபாமை கண்ணனைப் பார்க்கிருள்)

ஸ்ரீ க்ருஷ்ணன்:—வந்து உட்கார்ந்துகொள். பாதகம் இல்லை. இவள் எனக்கு அந்தரங்க சகி என்று தெரியு மல்லவா? பார்த்து சந்தோஷிக்கட்டும்.

(ஸத்யடாமை ஏகாஸனத்தில் உட்காருகிறுள்)

த்ரௌபதி! இவளுக்கு அவ்வளவு போதாது, அவளாய் இருந்தால் சேர்ந்தேதான் வந்திருப்பாள். நீ அவ ளோடுதான் என்னை வரும்படிப் பாடினை. அவள் இலேசில் வருகிறவளா? குடித்தனக்காரி. பெரிய ஸம்ஸாரி. படி தாண்டாத பத்தினி.

சத்யபாமை: நீதான் பாரேன். த்ரௌபதி! இப்படித்தான் என்னை வம்புக்கிழுக்கிறுர் உன் ஸ்னேகிதர். நான் அவளோடு வரவேண்டாம் என்றேனு? ஏதோ கூப் பிட்டாரே என்று வந்தேன். உன்னைப் பார்த்தும் நாள் ஆயிற்று.

ஸ்ரீ க்ருஷ்ணன்:—அவளைக் கூப்பிட்டேன் அந்த உன் ஸகி ருக்மணி தேவியை. "நான் வெளியில் வருகிற வழக் கம் இல்லை. நன்ருக இராது" என்று சொல்லிவிட் டாள். நான் என்ன செய்கிறது? இவளையாவது அழைத்து வருவோமென்று அழைத்து வந்தேன்.

சத்யபாமை:—த்ரௌபதி! அவ்வளவு கசந்துகொண்டா வது என்னை ஏன் அழைத்து வரவேண்டும்? அழைத் துவாருதிருந்தாலும் எனக்குக் கோபம்தான் வரும். எனக்கு ஒரு நாள்கூட, த்ரௌபதி! இம்மாதவனை விட்டுப் பிரிந்திருக்க முடியாது. இவர் விலாஸங்களில் நான் எப்போதும் மயங்கினவள். (பாடுதல்)

ஆனந்த பைரவி ஆதி

கொம்மி மெட்டு

1. நாதன் இவரைக் கபடநாடக சூத்ரதாரியாய்
கீதங்களில் பாடுவது கிஞ்சித்தும் பொய்யாய்விடுமோ? ()

2. அங்குதான் எப்போதும் வாஸம் அளவிலடங்கா விச்வாஸம்
இங்குதான் என்னிடம் நேசமென்றே மாற்றவே பார்க்கின்றூர்()

3. கட்டுக்கதைகள் என்னிடம் காரியமெல்லாம் அங்குதான்
மட்டிலாமுக வெட்டினுல் மாற்றுகின்றூர் மனஸ்தாபத்தை. ()

4. மோகனனிவர் இப்படிமோசம் செய்யச்செய்ய வென்னை
மோகமெனக்கவர்மீத மிதமாய் வளர்கின்றதே. (நாதன்)

5. கல்யாணராமன் என் இந்தக் காளமேகாபிராமனை
கல்பனையாய் அனுதினமும் கானம் செயயாதுவிடுவான்? (நா)

த்ரௌபதி:—பாமே! ஆனந்த சமுத்திரத்தில் முழுகிவிட்டேன் நான். இந்தப் பாட்டொன்றே போதுமே உன்னிடம் நம்மன்னன் என்றும் நிலைத்து நிற்க? நீ மஹா பாக்யவதி அல்லவா?

ஸ்ரீக்ருஷ்ணன் :—த்ரௌபதி! இது உன் சன்னிதி விசேஷம். இவளுக்கென் அந்தரங்கம் தெரியவில்லை. இவளை நான் உத்ஸவவிக்ரஹமாகவன்றோ வைத்துக் கொண்டுருக்கிறேன். இல்லாவிட்டால் இப்படி வெளியில் எழுந்தருளிப் பவனிவரமுடியுமா?

சத்யபாமை:—த்ரௌபதி! போதும் பரிஹாஸம் என்று சொல்லேன். இவருக்கு வேறு வேலை இல்லையா?

ஸ்ரீ க்ருஷ்ணன்:—மறந்துவிட்டேன். வேலையிருக்கிறது. நான் கொஞ்சம் வெளியில் போய்வருகிறேன். அவர்

களையும் பார்த்துப் பேசிவருகிறேன். இவள் இங்கேயே இருக்கட்டும். மறுபடியும் வந்து அழைத்துப் போகிறேன். (போதல்)

த்ரௌபதி :—பாமே! பரம கல்யாணியான நீ வந்தது எனக்கு நிரம்பவும் ஆனந்தத்தைத் தருகிறது. ஒன்று சொல்கிறேன் கேள். நீ எதற்கும் பதில் சொல்ல வேண்டும் என்று நினைக்கிறாய்! அது கூடவே கூடாது. இனி அதை விட்டுவிடு. நாம் "எது வேண்டுமானாலும் புருஷர்கள் சொல்லட்டும்" என்று பொறுமையாய்ப் பதில் சொல்லா திருந்துவிட்டால் என்ன மோசம் வந்துவிடும்? பதில் கொடுத்தால் தானே பேச்சு வளர்கிறது? பதில் இல்லாவிட்டால் தானே அவர்கள் நின்று விடுவார்கள். வெகு மரியாதையாயும் நம்மை நடத்துவார்கள்.

சத்யபாமை :—(சற்றாலோசித்து) த்ரௌபதி! உன்னை மெச்சினேன். ரொம்ப அழகாய் எடுத்துச்சொல்கிறாய். வாஸ்தவம்தான். நாம் பேசாமல் இருந்துவிட்டால் அவர்களுக்கு வம்புக்கு வழி ஏது? இதெல்லாம் தெரியாமல்தான் நான் விழிக்கிறேன். எனக்கு இன்னும் கொஞ்சம் இம்மாதிரியான புத்திமதிகளைச் சொல். நான் கெட்டியாய் மனதில் வைத்துக் கொண்டு அதன்படி நடக்கிறேன்.

த்ரௌபதி :—உன் வார்த்தையைக் கேட்கக் கேட்க எனக்குச் சந்தோஷம் பொங்குகின்றது. அவசியம் சொல்கின்றேன். கவனமாய்க் கேட்டுக்கொள். அதன்படி நீ நடந்தால் கண்ணன் உனக்குக் கண்ணுய்த்

தான் இருப்பார். உலகமும் உன்னடிக்கீழ் வணங்கும். கேட்கின்றனையா? (பாடுதல்)

ப்யாக் ஆதி

(கிளிப்பாட்டு தினிசு.)

1. வீட்டைவிட்டு வெளியில் போகாமல்
நாட்டில் யாரும் புகழ,
கூட்டில் கிளிபோல் பெண்கள் புருஷர்கட்டுப்
பாட்டில் விளங்கவேண்டும்.

2. புருஷர் மனம் கோணுமல் சிறிதும்
அறுவறுத்துக்கொள்ளாமல்
கருத்தில் அவர்நாடும் கார்யங்களைப் பெண்கள்
குறிப்பாய்ச் செய்திடவேண்டும்.

3. ஒன்றிலும் ஆசையின்றி அவர்கட்க்
கன்னபானுதிகளை
நன்ருய் உதவின பின்புதான் பெண்கள்தாம்
உண்ண நினைக்கவேண்டும்.

4. கணக்கு வழக்குகளைப் புருஷர்க்கு
க்ஷணமும் கொடுக்காமலே
குணமாய் அவ்வப்போதே சோம்பலின்றிப் பெண்கள்
வணங்கிப் பார்த்திடல்வேண்டும்.

5. புருஷர் விரும்பாததை வேம்பென்று
கருத்தில் நினைத்துத்தள்ளி
புருஷோத்தமனுயினும் பரனைப் பாம்பாய்
வெறுத்திடவேண்டும் பெண்கள்.

6. வம்புக்குப்போகாமல் பதியே
கும்பிடுதெய்வம் என்று

நம்பி நடந்திடும் நாரீமணிகளே
அம்புவிக்காபரணம்.

7. கல்யாணராமன் போற்றும் கண்ணனுக்
கெல்லாம் இவ்விதம் நீயாய்
சொல்லாமலே செய்திடில் அவரை நீதான்
நில்லென்றால் நின்றிடாரோ?

பாமே! கேட்டுக்கொண்டனையா? இப்பொழுது இந்த வனப்ரதேசங்களில் புருஷரை ஆராதனம் செய்வது ஒரு பொருள் அல்ல. அப்பொழுது இந்திரப்ரஸ்தத்தில் நீ பார்த்திருக்கவேண்டும். ஆயிரக்கணக்கான தாஸீதாஸவர்க்கங்கள். அபரிமிதமான தனகனகங்கள். இராப்பகல் ஓயாது விருந்தாளிகள். எத்தனையோ இருக்கும். இவ்வளவும் எனக்குத் தெரியும். எல்லாம் நான் நேரிலேயே பார்ப்பேன். எந்தச் சின்ன சங்கதியிலும் கருத்தாய் இருப்பேன். என்னை ஏமாற்றவே முடியாது. எல்லாவற்றிற்கும் மேலாய், என் புருஷருக்கு எத்தனையோ ஸ்திரீகள் உண்டு. அவர்களில் யாரையாவது என்னைப் பொல்லாதவள் என்று சொல்லச்சொல் பார்க்கலாம். முடியாது. ஏன் சொல்வார்கள்? நான் இகலோக சுகங்களையே மறந்தவள் ஆயிற்றே! எனக்குக் கோபமேது? அசூயை ஏது? நச்வரமான ஆசைதான் ஏது? இப்படி இருக்கிறேன். நீயும் இப்படித்தான் இருக்கவேண்டும்.

சத்யபாமை:—அம்மணி த்ரௌபதி! நான் இனி மறவேன் இந்த உபதேசத்தை. நீ எனக்கு குருவாய் விட்டனை. (பார்த்து) அதோ அந்தக்கஞ்சமலர்க்கண்ணனும் வந்துவிட்டார். (ப்ரவேசித்து)

ஸ்ரீ க்ருஷ்ணன் :—த்ரௌபதி! உபதேசமெல்லாம் ஆகி விட்டதா? நீ புருஷரை ஆராதிப்பதைப் பிரமாத மாய்ப் பெருமை சொல்லிக்கொள்கிறாய். புருஷர்கள் சாதுக்கள். ஆயிரம் புருஷர்களானாலும் வெகு சுலப மாய் ஆராதித்துவிடலாம். ஒரு ஸ்திரீயை சரிப்படுத்த முடியாது. அப்படி எனக்குக் கணக்கிலடங்காத ஸ்திரீகள் இருக்கின்றார்கள். அத்தனை பேரையும் நான் அடக்கி ஆள்கிறேன். என் பெருமையை யார் சொல்கிறது?

த்ரௌபதி :—மகா ப்ரபோ! இவ்வளவிருந்தும் நித்ய ப்ரம்மசாரி என்று பேர் வாங்கிவிட்டீர்களே. அது யாரால் முடியும்? நீங்கள் என்னையாளும் ஈச்வரன். நான் கேவலம் ஸ்த்ரீ. ஏதோ இவள் கேட்டாள். தெரிந்தவரையில் இவளுக்கு இதம் சொன்னேன்.

ஸ்ரீ க்ருஷ்ணன் :—நல்லது நாங்கள் போய்வருகிறோம் பாமே! புறப்படு. த்ரௌபதி! கவலைவேண்டாம், உன் கனவு ஒன்றும் உன்னைப் பாதிக்காது. உன் ஜோலிக்கு வருவதற்குமுன் அந்த துர்யோதனனுக்கு மரியாதை யெல்லாம் நடந்துவிடும், சிலகாலம் சென்றபின் என் கையினாலேயே உன்னை மகாராணி யாய் தர்மநந்தனனுடன் பட்டாபிஷேகம் செய் வேன்.

சத்யபாமை :—நான் போய் வருகிறேன்.

ஸ்ரீ க்ருஷ்ணன் :—(போக ஆரம்பித்துத் தனக்குள் பாடுதல்)

தேசிகதோடி ஆதி

கண்ணிகள்

1. லோகநாதன் நான் ஆகினும் உலகத்தில் பற்றிலன் ஆகினும்
தாகமாய் இவள் நினைக்கத் தாவியோடி நான் வந்தனன்.

2. பாண்டவர் ஸஹாயன் என்ற பேர் எனக்கவச்யமோ?
தாண்டவம் ஆடுகின்றேனே தானாக இங்கு நித்யமாய்.

3. அன்றிவள் துகிலை அவ்வயோக்யன் வந்துபற்றவும்
கன்றைநாடும் கோவைப்போல் கடுகி ஓடி நான்வந்தேனே.

4. நாளைக்கோர் முனியின்சாபம் நாடாமல் அடிக்கவே [னே.
வேளையில் வந்திவளிடம் தான் ஒன்றுவேண்டி நான் உண்பே

5. பாரதப்போர்வந்ததும் நான் பார்த்தஸாரதிஆகி
ஸாரமானகீதை என்றொரு சாஸ்திரத்தைச் சொல்வேனே.

6. கல்யாணராமன் கொண்டாட காந்தன் யுதிஷ்டிரரோடு
கல்யாணியிவட்குநான் கனகாபிஷேகம் செய்வேனே.

(போதல்)

முதல் அங்கம் ஸம்பூர்ணம்.

அங்கம் 2. அரங்கம் 1.

இடம். ஹஸ்தினபுரம் துரியோதனன் அரண்மனை.

காலம். மாலை.

(மலயத்வஜன் என்ற சாரன் பிரவேசித்தல்)

மலயத்வஜன் :— (தனக்குள்) நமது மகாராஜனுக்குப் புத்தி என்பதே துளியும் கிடையாது. எப்பொழுதும் மெத்த நல்லவர்களான அந்தப் பாண்டவர்களைக் கெடுக்கத்தான் எண்ணம். அதுவோ நடப்பதில்லை. என்ன கெடுதலைச் செய்ய முயன்றாலும் அது விபரீதமாகி இவருக்கேதான் அனர்த்தமாய் முடிகின்றது. அந்தப் பாண்டவர்களுக்கு இதனால் பேரும் பெருமையும் முன்னிலும் அதிகமாய்விடுகிறது. நமது மகாராஜாவுக்குத் தலைதூக்க முடியாத அவமானம் தான் மிஞ்சி நிற்கின்றது. எத்தனை தடவைதான் அவமானப் பட்டாலும் நமது மகாராஜாவுக்குப் போதுகிறதில்லை. திரும்பத் திரும்ப இந்தக் கதைதான் (பாடுதல்)

தேசிகதோடி. ஆதி.

பல்லவி

அவமானம் புருஷலக்ஷணம் என்று
யாரறிவார் நமதரசன் துர்யோதனன்போல்? (அவமா)

அனுபல்லவி

அவலமாய் யாருமறியாது பதுங்கிப்
பவனவேகத்துடன் படபடத்தோடச் செய்யும் (அவமா)

சரணங்கள்

1. ஜலத்தை ஸ்தலமென்று மயங்கி நடந்து
சலசலவென்று விழுந்தும்
பலத்த சுவற்றை வழியென்றதில் போய்
பலமாய் மோதுண்டும்
நிலத்தில் வெட்டிய பழம் குழியை மேடை என்று
நினைந்ததில் சரிந்து சரிந்து புரண்டும் (அவமா)

2. கல்யாணி த்ரௌபதி தோழியருடனே கண்டே இதைச் [சிரித்தும்
துலைந்து போவென்று பீமர் உடுக்கத் துணி ஒன்றெடுத் [தெரிந்தும்
புல்லகமலதளநயனன் புருஷோத்தமன்
கல்யாணராமனைக் கவிபாடச்செய்து மிதை (அவமா)

அதோ மகாராஜன் வருகின்றார். பிடிகொடுக்காமல் நய பயமாக நாம் பேசவேண்டும். கூடுமானால் நன்மையைச் சொல்லியும் பார்க்கவேண்டும்.

து. ராஜா :— மலயா! ஏது இங்கேயே நின்று விட்டாய்? இப்பொழுதுதான் வந்தனையோ? நீ போய் வந்த சங்கதி என்ன? எங்கிருக்கின்றார்கள் அந்தப் பஞ்சை கள்? என்ன செய்துகொண் டிருக்கின்றார்கள்? ஏதா வது விசேஷம் உண்டா?

மலய :— மகாராஜ்! எங்கென்று நான் அவர்களைப் போய்த்தேடுதேடென்று தேடுவேன். தேடித தேடிக் கால் கள் கடுக்கின்றன. இமய மலையில் ஏறிப் போயிருப்ப தாய்ச் சொன்னார்கள். அந்தப் பனியிலும் சாரலி லும் நெடுநாள் அலைந்தேன், கடைசியில், நமது கோ

ஷத்துக்குச் சமீபமான ஒருகாட்டில் அவர்களைக் கண்டேன். (பெருமூச்சு விட்டுக் கொண்டு) என்ன வேலை இது? போங்கள்.

து. ராஜா :— போகிறது. கண்டுபிடித்து விட்டாயல்லவா? இப்பொழுது அங்குத்தானே அவர்கள் இருப்பார்கள்?

மலய :— ஆமாம், மகாராஜ்! ரொம்ப நல்ல இடம் அது. ஸமீபத்தில் ஸமுத்திரம் போல் ஒரு தடாகம் இருக்கிறது. தேவபோகம் தான் அவர்களுக்கு. எத்தனை மஹான்களெல்லாம் அவர்களைப் போய்ப்போய் பார்க்கின்றார்கள்? அந்த அர்ஜுன ராஜர் தேவலோகத்திற்கு இப்படியே போய் வந்தார்களாம். வெகு பெருமையாய் எல்லோரும் சொல்கிறார்கள்.

து. ராஜா :— (பொறாமை முகமாய்) அதெல்லாம் தெரியுமடா எனக்கு? அவர்கள் எப்படி இருக்கிறார்கள்? அதைச்சொல். கதையை வளர்த்தாதே.

மலய :— (தனக்குள்) அவர்கள் பெருமையைச் சொல்ல ஆரம்பித்ததும் என்னகோபம் வருகிறது இந்த மகாராஜனுக்கு? இனி வேறு மாதிரியாய்ப் பேசுகின்றேன். (வெளியாய்) எப்படி இருக்கிறதென்ன? "வனவாசம் இன்னும் நெடுநாள் இருக்கிறதே. நம் சத்துருக்களைச் சட்டென்று ஒன்றும் செய்வதற்கில்லையே" என்று ஏங்கித்தான் இருக்கின்றார்கள். இந்திரப் பிரஸ்தத்தில் இருந்த மகிமை இனி அவர்களுக்கு வருமா? எல்லாரும் ஒடுங்கி இளைத்துப் போயிருக்கிறார்கள். பார்க்கப் பிடிக்கவில்லை.

து. ராஜா :— (தனக்குள்) அப்படிச் சொல்லடா மகனே! ஏங்கி இருந்தால் போதுமா? அப்படியே உறங்கிப் போய்விட வேண்டாமா? இதுவன்றோ எனக்கு வேண்டும் (பாடுதல்)

(நந்தா உனக்கிந்த என்ற மெட்டு)

மோகனம். ஆதி.

பல்லவி

முந்தாமலே மந்தமதி வந்து மனம் நொந்தென் சிந்தைதீர
இந்தப் பாண்டவர் சிந்தலாகாதோ ?

அனுபல்லவி

அந்தரங்கம் எனக்கானந்தத்தில் முழுகுமே
சொந்த சகுனியும் நானும் சொல்லிச் சொல்லி சுகிப்போமே

சரணங்கள்

1. என்ன ராஜசூய யாகம் ! என்ன திவ்ய வைபோகம் !
என்ன தனதான்ய கனகரத்தினங்களின் யோகம் !
என்ன யாவர்க்குமிலாத புண்ணிய பரிபாகம் !
என்ன கல்யாணராமாதி காயகர்களின் ராகம் ! !
என்ன ராப்பகல் சாப்பாடு ! என்ன ஒப்பில்லா ஏற்பாடு !
என்ன வந்ததெல்லாம் வாங்கிவைத்து நான் பட்டபாடு !
என்ன கூச்சல் என்ன எங்கும் கேட்கு முறத்த கூப்பாடு !
என்னமாய் சகித்தேனோ நான் இந்த அனியாயங்களை?(மு)

2. என்ன தேவரிஷிகள் கூட்டம்! என்ன பெரும் ஆர்ப்பாடம்!
என்ன இங்குமங்கும் ஓட்டம் ! என்ன மேனகை ஆட்டம் !
என்ன கண்ணன் இட்டசட்டம்! என்ன சாமானின் திட்டம்!
என்ன கர்ணன் செய்ததானம் ! என்ன உயர் சம்மானம் !

என்ன மதுரபானம்! என்ன எங்குமே ஒரே கானம்!
என்ன தர்மபுத்ரன் பெருமை! என்ன த்ரௌபதிக்குமகிமை!
என்ன எல்லோர்க்கும் கொண்டாட்டம்! எனக்கு
மட்டுமோ திண்டாட்டம்? (மு)

(வெளியாய்) மலயா! அந்த அவர்கள் பொதுராணியம்மாள்: அவள் எப்படி இருக்கிருள்?

மலய:— அவர்களுக்குத்தான் கொள்ளையாய் வேலைஇருக்கிறதே? எடுத்த அக்ஷய பாத்திரத்தைக் கீழேவைக்க முடியாமல் என்ன கூட்டமாய் வந்து வந்து சாப்பிடுகிறது? போட்டுப் போட்டு அவர்களுக்குக்கை சலித்துப் போகிறது போங்கள். துரும்பாய் இளைத்துப் போய் இருக்கிருர்கள்.

ராஜா:— (தனக்குள்) நிந்தாஸ்துதியாய்ப் பேசிவிட்டான் இந்த மலயன். வாஸ்தவத்திலும் அவள்கை இன்னமும் மேலாகத்தான் இருக்கிறது. (பாடுதல்)

தோடி. ஆதி.

1. வேண்டுமென்றே பொடிவைத்து மயன்மாய
வேலைசெய்த பொல்லாச் சபையில்
கண்கள் கண்டதெல்லாம் பொய்யும் காணுதெல்லாம்
மெய்யும் ஆனுல் அதற்கு நான் என் செய்வேன்?

2. ஒண்டியாயப் போயிந்த மாயமறியாது மண்டி
போட்டு நான் விழுந்திட்டால்
பெரும் சண்டியிவள் சிரித்துச் சேடிகளையும்
கிண்டிச்சிரிக்கச் செய்கின்றதோ?

3. மாதிவள் கல்யாணராமன் பார்க்கவெனை
மானம் போகும்படிச் செய்ததால்
நானும் சூதில் பாண்டவரை வென்றிவளை
யன்று சீர்குலைக்க வழி பண்ணினேன்.

4. எப்படியோ இவள் கட்டிய சேலை
ஒன்றாயிரமாக வளர்ந்ததே!
தப்பா திப்படிச் சாணேறச் சருகினவோர் முழம்
எப்படி நான் கறை ஏறுவேன்?

இருக்கட்டும் இருக்கட்டும். எப்படியாவது இவளை மறுபடி ஏதாவது எக்கச்சக்கத்தில் கொண்டுவிட வழிபார்க்கிறேன். இல்லாவிட்டால் நானும் ஒரு புருஷனோ? அந்தப் பாண்டவப் பஞ்சைகளையும் பொறாமையால் தவிக்கும்படிச் செய்கிறேன். (வெளியாய்) மலயா! நீ போகலாம். சகுனிமாமாவை என்னிடம் வரச் சொல்வாய். (போகிறான்)

(பாடுதல்)

கமாஸ். ஆதி.

பல்லவி

வணங்காமுடிமன்னனே நானலவோ? (வணங்)

அனுபல்லவி

வணங்கி ஒடுங்கி வாழவென்றால் கூடுமோ? (வணங்)

சரணங்கள்

1. அணங்கிவளை எப்படியாவது நான் மடக்கி
குணம்கெடச் செய்யாவிடில் குறையல்லவோ? (வணங்)

2. கல்யாணராமன் போற்றும் கண்ணனிதைக் கெடுக்க
எல்லாவிதமும் பார்த்தாலும் ஏமாறுவேனோ? (வணங்)

(போதல்.)

அங்கம் 2. அரங்கம் 2.

இடம். ஹஸ்தினபுரம் அரண்மனை.

காலம். சாயங்காலம்.

(துரியோதன ராஜன் துச்சாஸனன் கர்ணன் சகுனி இவர்கள் பிரவேசமாய் இருக்கிறார்கள்.)

துர்யோதனராஜன் :— "மாமா! யாரானாலும் நீ ஆமா? நீ யில்லாமல் எனக்கு ஒரு நிமிஷமும் போமா;

(பாடுதல்)

பூரிகல்யாணி. ஆதி.

1. இமையில் எனை வைத்து என்றும் ரக்ஷித்திடும்
சகுனிமாமா!
ஸமய ஸஞ்சீவி நீ சாதிக்காதது முண்டோ?
சகுனிமாமா!

2. பஞ்சைப் பாண்டவரிடம் பொங்கிய லக்ஷ்மிகளைச்
சகுனிமாமா!
மிஞ்ச வொட்டாதவர்க்கு வஞ்சனையால் கெலித்தாய்
சகுனிமாமா!

3. தேவலோகம் சென்ற தேவரஹஸ்யத்தை நான்,
சகுனிமாமா!
யாவையும் நம்புவேனோ? என்ன கட்டுக் கதையோ?
சகுனிமாமா!

4. காட்டில் போயும் நாட்டில் காணக் கௌரவங்களை,
சகுனிமாமா!
கேட்டு நான் தவித்திடக் காணலாமோ இவர்கள்?
சகுனிமாமா !

5. நம்மருமை பெருமை நன்றாய் இவர்கள் பார்த்து,
சகுனிமாமா!
விம்மி விம்மியே சோர்ந்து விசனப்பட வேண்டாமா?
சகுனிமாமா!

6. கல்யாணராமன் போற்றும் கண்ணன் குறுக்கிடாமல்,
சகுனிமாமா!
நல்ல வேளையாயிந்த நன்மை பலிக்கவேண்டும்.
சகுனிமாமா!

மாமா! இவர்களைப்பற்றி என்னென்னமோ கேட்டோமே. அதெல்லாம் நிஜமாய் இருக்கும் என்று எனக்குத் தோன்றவில்லை. இருந்தால் தான் என்ன? வாடிவதங்கிப் போயிருப்பதாகத்தான் நம்மலயன் சொல்கிறான்.

சகுனி :— ஆம். ஆம். அப்படித்தான் எனக்கும் கேழ்வி.

துச்சாஸனன் :— அந்த த்ரௌபதி பலமாய் கறுத்துப் போய் இருக்கிறாளாம். பார்க்க வழங்க வில்லையாம்.

கர்ணன் :— நீ செய்திருக்கும் யோசனை நிரம்பத் தரமானது. உடனே அப்படியே செய்யவேண்டும்.

துச்சாஸனன் :— ஏதாவது அவர்களை அவமானப் படுத்தத்தான் வேண்டும். கர்ணா! இதோ பார். என் கையில் அன்றைக்கவள் துகில் உரிந்தபோது உரிந்த தோல் இன்னம் வளரவில்லை; வலியோ இன்னும் அப்படியேதான் படுத்துகிறது.

சகுனி :— வெகு சிறப்பாய் நாம் அலங்கரித்துக் கொண்டு பவனிச் செல்லவேண்டும். நமது ஸ்திரீகளைப் பார்த்தால் மோகினிகளாய்த்தான் தோன்ற வேண்டும்.

கர்ணன் :— இப்படி உதவாத சம்பத்து நமக்கிருந்தென்ன? போயென்ன? (பாடுதல்)

ப்யாக். சாபு.

பல்லவி

இருந்தென்ன ? போயென்ன ?
திருப்பிடிக்கும் பாக்யங்கள். (இருந்)

அனுபல்லவி

கருத்தாய் தாயாதிகள் கண்டு கவலைகொண்டு
கறுத்த முகங்களுடன் கலங்கிப் போகவேண்டாமோ ? (இருந்)

சரணங்கள்

1. பரிமளங்கள் பறக்கப் பரிஜனங்கள் சூழ்ந்திட
எறியும் தணல் போலவர் எதிர்செல்ல வேண்டாமோ நாம்? (இருந்)
2. கல்யாணராமன் கொண்டாடும் கண்ணன் மகிமை நிற்க,
எல்லாவிதத்திலும் நம் ஏற்றம் தெரியவேண்டும். (இருந்)

துச்சாஸனன் :— அண்ணா ! இப்பொழுதே புறப்பட்டால் என்ன ? நமது தேவிகளுக்குத் தான் நவரத்னவரு கிட்ட த்ரௌபதியின் சேலைகள் ஜோதிமயமாய் ஏராளமாய் இருக்கின்றனவே ?

துர்யோதனன் :— எல்லாம் சரிதான். நமது பிதா இதற்கிடம் கொடுக்க வேண்டுமே ?

சகுனி :— அதற்குத் தகுந்த யோசனை நான் செய்துவிட்டேன். நமது ஆயர்பாடி அவர்களிருக்குமிடத்திற்குச் சமீபத்தில் தான் இருக்கிறது. வழக்கம்போல் அங்கு கோஷயாத்ரையாய்ப் போகிறது என்று சொல்லி நான் சுலபமாய் உத்திரவு வாங்கி விடுகிறேன்.

துர்யோதனன் :— என்னமோ எனக்கு யோசனையாய்த் தான் இருக்கிறது. விதுரச் சித்தப்பா வந்து குறுக்காய் தடுப்பாரே?

சகுனி :— அதற்கு நான் பார்த்துக் கொள்கிறேன். போவோம் வா.

(எல்லோரும் போதல்.)

அங்கம் 2. அரங்கம் 3.

இடம். ராஜசபை.

காலம். காலை.

(த்ருதராஷ்டிரர் கொலுக் கொண்டிருக்கிறார் ராஜார்ஹமான பரிவாரங்களோடு. விதுரர் மந்திரி பீடத்தில் காண்கிறார்.

துர்யோதனன் துச்சாஸனன் சகுனி கர்ணன் பிரவேசிக்கிறார்கள்.)

த்ருதராஷ்டிரர் :— (வருகிற காலடி கேட்டு) யார் அங்கு வருகிறது?

சகுனி :— நான்தான் சகுனி.

த்ருதராஷ்டிரர் :— அந்த அஸத்து துர்யோதனனும்கூடத் தானே வந்திருக்கிறான்?

கர்ணன் :— மகா ப்ரபோ! நானும் வந்திருக்கிறேன்.

த்ருதராஷ்டிரர் :— இன்னம் யார்? அந்தப் படுக்காளி துச்சாஸனனோ?

கர்ணன் :— ஆம் ஆம். அவன்தான்.

த்ருதராஷ்டிரர் :— நல்ல சேர்க்கை தான். துஷ்ட சதுஷ்டயங்களே ! எங்கே வந்தீர்கள் ?

சகுனி :— பேசுவதற்கு முன்னேயே இப்படிக் கடுகடுக்கிறீர்களே, என்னத்தை நாங்கள் சொல்லுகிறது? ஏதோ கோஷயாத்திரை போகவேண்டுமாம் துர்யோதனனுக்கு. வருஷா வருஷம் போவது வழக்கம் உண்டு. உங்கள் உத்திரவு கேட்கவந்தான். நாங்களும் கூடவந்தோம். இதற்குள் இவ்வளவு சம்மானம் எங்களுக்கு ஏற்பட்டு விட்டது.

கர்ணன் :— நம்மைக் கண்டாலே இவருக்கு விஷமாயிருக்கிறது. ஏன் இங்குவந்தோம்? போவோம் வா.

துர்யோதனன் :— அது இவர்மேல் பிசகில்லை கர்ணா! கிட்டவே சித்தப்பா ஒருவர் இருக்கிறாரே ! அவர் போதனை.

த்ருதராஷ்டிரர் :— விதுரா ! கோஷயாத்ரை போகவேண்டுமாம். போவது வழக்கம் தானே?

விதுரர் :— வழக்கம் தான். அண்ணா! அந்த எண்ணத்துடன் இவர்கள் போவதாய் எனக்குத் தோன்றவில்லை. அங்கு அதிசமீபத்தில் நம் பாலகர்கள் தர்மபுத்ராதியர்கள் இருக்கிறார்கள். தெரியும் அல்லவா?

த்ருதராஷ்டிரர் :— சரிதான். துர்யோதனன் வெறுமனே இருக்கமாட்டான். அவர்களைப் போய்ச் சீண்டுவான். அனர்த்தம் வரும். கர்ணா ! இதுவேண்டாம். சகுனி! கோஷத்திற்கு நாம் நேரில் போகவேண்டுமென்பதவசியமில்லை. யாராவது மந்திரிகள் போய் மாடு

கன்றுகளைக் கணக்குப் பார்த்து வரிகளை வாங்கி வரலாம்.

துர்யோதனன் :— (கோபாவேசத்தோடு) நான் போகத் தான் வேண்டும்.

கர்ணன் .— அவர்கள் ஜோலிக்குப் போவதாய் எங்களுக்கு எண்ணம் இல்லை.

சகுனி :— நாங்கள் என்ன புத்தி இல்லாதவர்களா? ஏன் வம்புக்குப் போகிறோம்?

கர்ணன் — அப்படியே அவர்களிருக்கு மிடத்திற்கே விளையாட்டாய்ப் போனால்தான் எனனமோசம்? நாங்கள் என்ன கிள்ளியா விடுவோம்? அவர்கள் தான் எங்களை என்ன பண்ணி விடுவார்கள்?

விதுரர் :— அண்ணா! எண்ணம் வெளிப்பட்டு வருகிறது. பார்த்தீர்களா? போகக் கூடாது என்று கண்டித்து விடுங்கள். நீங்கள் கேட்கமாட்டீர்கள். என்னை ஆலோசனை கேட்கிறீர்களே தவிர துர்யோதனன் சொல் படித்தான் நடத்துகிறீர்கள். நான் சொல்லி என்ன லாபம்? (பாடுதல்)

காவடிச்சிந்து

மோகன முகாரி ராகம்.

பிறந்ததுமே இவன் ஊளை நரி போலப்
பலமாக ஊளையிட்டான். இவன்
பிறந்ததுலகிற்கு நன்றில்லை என்றன்றே
பிடித்துத் துலைக்கச் சொன்னேன்.

சரணங்கள்

1. கேட்கவில்லை நீங்கள் அதுமுதல் இவனாலே
கேட்காதும் கேட்டுக்கொண்டு - வீணாய்ப்
பாழ் வினையால் இரவும் பகலுமாகப்
பாடுபடுகின்றீர்கள்.

2. பீமசேனன் கதையோ? ப்ரபலார்ஜுனன்
பாரிய காண்டீவமோ? விரைவில்
க்ஷாமமாக்கப் போகின்றதிவனைப் போகச்
செய்யாதேயுங்கள் நீங்கள்?

3. நான் சொல்லித்தா னென்ன! நான் சொல்வதை நீங்கள்
நன்றாய்க் கேட்டாலும் என்ன?
கானத்தில் கல்யாணராமன் சொல்வதுபோல்க்
கலி இவனை விடுமோ?

துர்யோதனன் :— போகத்தான் போகிறேன். எதற்கும் இவர் தடையா? கர்ணன் சகுனி யெல்லாம் கூட வரும்போது எதற்காக நீங்கள் ஆலோசிக்கவேண்டும்?

த்ருதராஷ்டிரர் :— நீ கேட்கமாட்டாய். போய்வா. புத்தியாய் இரு.

(போதல் சபை கலைதல்.)

இரண்டாவதங்கம் ஸம்பூர்ணம்

ஸ்ரீ :

அங்கம் 3. அரங்கம் 1.

இடம். விதுரர் நிலாமுற்றம்.

காலம். இரவில் நிலவு வேளை.

(பிரவேசித்து.)

விதுரர் :— (உலாத்திக்கொண்டே தனக்குள்) துடுக்குக் காரம்பித்துவிட்டான் மறுபடியும் இந்தமந்தன் துர் யோதனன். தடுக்கமுடியவில்லை நம் அண்ணனுக்கு இவன் தௌஷ்ட்யத்தை. இடம் கொடுத்துவிட்டார். ஏதோ ஜரப்பாய் போகிறதாம். இவன் பவுஷை எல் லாம் அவர்கள் முன் காட்டுகிறதாம்! போகட்டும்! காட்டட்டுமே! இவன் பெருமையை அவர்கள் பார்த்து மயங்கிவிடப் போகிறார்களா? என் மைந்தன் அர்ஜுனனுக்கில்லாத பெருமையா இவனுக்கிருக் கிறது? என்ன அந்தஸ்து சொந்தமாய் இருக்கிறது இவனுக்கு? அவர்கள் கண்டு கழித்ததைத் தானே இவன் கொண்டு குலாவுகிறான். இவனுக்கிந்த எண் ணம்தான் ஏன் நிறைவேற வேண்டும்? இவன் கொட்ட மடிப்பதற்குள் இவனை மட்டம்தட்ட என் அய்யன் கோபாலகிருஷ்ணன் ஸத்யஸங்கல்ப மில்லையா? பஜிக்கிறேன் அந்த பகவானை.

நோட்டு மெட்டு

ப்யாக். ஆதி.

1. அகிலலோகபாலனே! அன்பர்கட்கனுகூலனே!
நிகில ஸாது ரக்ஷனமென்ற நித்ய புண்யசீலனே!

2. நந்தகோபபாலனே! நவஜலதரநீலனே!
சுந்தரபகுலீலனே! சுற்றும்கோபியர் லோலனே!

3. விலவிலத்து யானை வீறிட்டழைத்த ஆதிமூலனே!
கல்யாணராமன் பாடுகின்ற கானத்தில் விலோலனே!

4. கருணை மழையைப் பொழிந்திடுமெங்கள் பக்தபரிபால
அருணமான நின் பயோஜ சரணம் எங்கள் சரணமே. [னே!

(பார்த்து):— என்ன பகவத் ஸ்மரணத்தின் மகிமை! ஈசனை பஜித்தேனே இல்லையோ, அதோ பரம பாகவ தோத்தமரான ஸ்ரீ நாரத ஸ்வாமியே பஜனைசெய்து கொண்டு வருகிறாரே?

(பிரவேசித்து)

நாரதர் (பஜனை பாடுதல்)

கண்ணிகள்

காம்போதி ஆதி.

கோகுல வீதியில் ஓடிய க்ருஷ்ணா!
கோபியரோடுற வாடிய க்ருஷ்ணா!

வேதமும் நாதமும் தேடிய க்ருஷ்ணா!
வேதியரோடென்றும் கூடிய க்ருஷ்ணா! (கோகுல)

ராமுழுதும் ராஸம் ஆடிய க்ருஷ்ணா!
ராகங்கள் வேணுவில் பாடிய க்ருஷ்ணா! (கோகுல)

கரியுரி போர்த்தவர் நாடிய க்ருஷ்ணா!
சிரவில் கல்யாணராமன் சூடிய க்ருஷ்ணா! (கோகுல)

கங்கை பெருகும்நின் பங்கஜ சரணம்
மங்கள விக்ரஹனே! எங்கள் சரணம். (கோகுல)

(வேறு)

இந்துஸ்தான் காபி ஆதி.

கோபால பாலனைப் பாடுவேன் ; அவன்
கோக்கள் சூழும் பாதம் நாடுவேன்.

அன்பர்களோடென்றும் கூடுவேன் ; அவரோடு
இன்பம் பிறக்க ஓடுவேன்.

திவ்ய நாமங்களையே தேடுவேன் - தாஸர்
பவ்யபாததூளியே சூடுவேன்.

கல்யாணராமனோடு கூடவே - அவன்பேரைச்
சொல்லிச் சொல்லி நான் ஆடுவேன்.

(விதுரரிடம் வந்து)

ஞான சிகாமணியே ! க்ஷேமமா ?

விதுரர் :— க்ஷேமத்திற்கென்ன ஆக்ஷேபனை ? தங்கள் வரவே அதற் கடையாளமாயிற்றே ! ஏதோ பகவானைப் பாடிக்கொண்டே வந்தீர்கள். அதுவே உங்கள் ஜீவனமும் உஜ்ஜீவனமு மாகிறது. இன்னம் ஒரு கீர்த்தனம் ஆகட்டுமே ! என் கவலையும் கார்யமும் இருக்கவே இருக்கிறது.

நாரதர் :— பாடுகிறேன் (பாடுதல்)

சங்கராபரணம் ஆதி.

பல்லவி

கோபால பாலனை நான்—கோலாகலமாய்க்
குதித்துக் குதித்துப் பாடுவேன்.

அனுபல்லவி

ஆபாலகோபாலமான அன்பரைக் கூட்டி
ஆனந்தமாய் வேணு கானம்ருதம் ஊட்டிய (கோபால)

சரணங்கள்

1. கன்று கால் ருசிபார்க்கக் காராம்பசுக்கள் சூழ,
அன்று வந்த பூர்ணிமை அகன்று வெகுநாள் நிற்க,
நன்று நன்றென்று நாதயோகிகள் ஆனந்திக்க
நின்ற ஸேவையாய் ராஸ நர்த்தனம் புரிந்திட்ட, (கோபால)

2. கோ கோப வத்ஸங்களைக்கொண்டே போய்த் தன்னுலகில்
மோக நித்ரையில் பிர்ம்ம தேவனோராண்டாழ்த்திட,
ஏகனே அத்தனையும் ஆகி எங்கும் நிறைந்து
யோகம் கோகுலத்திற் கடிக்கும் யோகம் செய்திட்ட,
(கோபால)

3. சாருகாத்ரனை ஸர்வ ஸஜ்ஜனர்க்கும் மித்ரனை
நீரம் நிறைந்த நீலமேகஸம காத்ரனை
ஸாரமான கல்யாணராமன் ஸாஹித்யத்திற்கு
தாராளமாய் உதவும் திவ்விய சரித்திரனை. (கோபால)

விதுரர் .— ஆகா! கரும்பாய்த்தேனைத் தேவாம்ருதமாய்த் தானிருக்கிறது உங்கள் கானம்! அந்த தேவ தேவனான வாசுதேவனுக்குத்தான் இதர்ப்பிதம். நான் உங்களை ஒரு கார்யத்தில் விடப்பார்க்கிறேன்.

நாரதர் :— தெரியும் எனக்கு அது. இப்பொழுது நான் த்வாரகையிலிருந்துதான் நேராய் வருகிறேன். அந்த ஸ்ரீ த்வாரகா நாதன் ஏவலால் நான் தேவேந்திரனிடம் போகிறேன். உங்களுக்காகத்தான்.

விதுரர் :— போய் என்ன செய்யப் போகிறீர்களோ?

நாரதர் :— அங்குப்போய் தேவேந்திரனுக்குச் சொல்லிச் சித்ரசேனனைக் கிளப்பி விடப்போகிறேன். உங்களைப்பார்த்து நாளாயிற்றே என்று ஆகாசத்தில் போனவன் இங்கு நடுவில் இறங்கினேன்.

விதுரர் :—அப்படியா? பரம சந்தோஷம் எனக்கு. சித்ர சேனன் என்ன செய்வானோ?

நாரதர் :—அவன் அர்ஜுனனுக்கு உயிர்த்தோழன். அவனுக்காக எதுவும் செய்வான். இந்த துர்யோதனாதிகளைப் பிடித்துக் கட்டிக்கொண்டுபோய் தேவலோகத்திலேயே காவலில் வைத்துவிடலாமென்று எனக்காலோசனை?

விதுரர் :—திவ்யமான ஆலோசனை இது. உங்களுக்கு இது நிரம்பவும் பிடித்த வேலையாய் இருக்கும்.

நாரதா :—பிடித்த வேலைதான். தடையில்லை. எனக்கேதாவது கலகத்திற்கு வழிவேண்டும். எப்போதும் ஏதாவது சண்டை சச்சரவை உண்டுபண்ணிக்கொண்டே இருக்கவேண்டும். இது என் விளையாட்டும் விநோதமும் என்றே சொல்வேன் (பர்டுதல்)

பியாகடை ஆதி.

பல்லவி

கலக நாரதர் என்றபேர் எனக்கே
கல்பகாலமும் கிடைத்தால் அது போதும். (கலக)

அனுபல்லவி

உலக மூன்றினிலும் ஓடி ஓடி நான்
கலகங்களை மூட்டிக்கை கொட்டிச் சிரிப்பேன். (கலக)

சரணம்

உலகங்களை மூன்றே அடியால் அளந்து
பலமாய்ப் பக்தனை பலியைப் பாதாளத்தில்
விலங்கிவிட்ட அந்த விளையாட்டுப் பிள்ளைக்குக்
கல்யாணராமன் சொல் கார்யதர்சி நானே ! (கலக)

நல்லது போய்வருகிறேன். நாழியாகிறது. அங்கு திலோத்தமை நர்த்தனம் நடக்கும். தவரவிடக்கூடாது. (போதல்)

அங்கம் 3. அரங்கம் 2.

இந்திர சபை

[தேவேந்திரன் சித்ர சேனுதிகளுடன் கொலுவில் இருக்கிருர். திலோதத்ஙம சபையில் பதம்பாடி அபிநயிக்கிருள்.]

மஞ்சிதினமே என்றமெட்டு

திலோத்தமை (பாடுதல்.)

ஆனந்த பைரவி த்ரிபுடை.

பல்லவி

என்ன பொடி போட்டாளோ? என்ன
மாயம் செய்தாளோ? (என்ன)

அனுபல்லவி

பன்னகசயன னென்னு
கந்த கோபாலனுக்கு (என்ன)

சரணம்

சமுகமாய் முன்போல் என்முன்
சலபமாய் வரக்காணும்

விமுகமாய் இருந்திடில்
விஷமும் வேறு வேண்டுமோ?
அமுதமாய்க் கொஞ்சிப்பேசி
அணையாதிருந்தால் இனி
அமுதுண்ணேன் நான் கல்யாண
ராமனே தான் சொன்னாலும். (என்ன)

(நாரதர் பிரவேசிக்கிறார்.)

திலோத்தமை :— ஸ்வாமி! வாருங்கள். அடியாள் வந்தனம் செய்கின்றேன். பாடினேனே கேட்டீர்களா?

நாரதர் :— நீ பாடுவதற்கென்ன? எப்படி நீ அப்ஸரஸ்திரீகளில் கடைந்தெடுத்தவளோ அப்படித்தான் அதுவும் இருக்கிறது. நான் கேட்டுக்கொண்டுதான் வந்தேன். நான் சொல்லிக் கொடுத்தேனே அந்த ஸம்ஸ்கிருத கீர்த்தனம்! ஞாபகம் இருந்தால் அதைப் பாடு பார்க்கலாம்.

திலோத்தமை :— ஸ்வாமி! கேளுங்கள் பாடுகிறேன். சரியாய் இருக்கிறதோ பாருங்கள் (பாடுதல்)

கல்யாணி. ஆதி.

பல்லவி

காமகோடி ஸமான மஹம்ஸ்ரீ
ராமமேவ ஸதா பஜே!

அனுபல்லவி

ஸோமகோடி நிபாநநம்
ஸுர கோடி வந்தித பாதஸரோருஹம். (காம)

சரணம்

தேவ தேவமயா திபாவக பாயஸாதிவ நிர்மிதம்
தேவகார்ய வசாத் பித்ருப்ரிய காரண திவநிர்கதம்

தேவ சத்ரு நிபர்ஹணுத்யமிநாம் ப்ரியாதிதிதாம் கதம்
தேவமானுஷ வேஷதாரிணம் தாஸகவி கல்யாணராமார்ச்
சிதம் (காம)

நாரதர் :— ரொம்ப அழகாய்ப் பாடினுய். அந்த ஸ்ரீராம
னுக்கே இது அர்ப்பிதம்.

திலோத்தமை :— ஸ்வாமின் ! அதிருக்கட்டும். தாங்கள்
ஒரு கீதம்பாடி அடியாள் கேட்டு க்ருதார்த்தையாக
லாகாதா ?

நாரதர் :— அவசியம் பாடுகிறேன். (பாடுதல்)

தேசிகதோடி ஆதி.

பல்லவி

பும்ஸாமபி மோஹநரூபம் பஜேஹம். (பும்ஸா)

அனுபல்லவி

புல்ல கமலதள கோமள நயனம் (பும்ஸா)

சரணங்கள்

1. தம் ஸாது ஸேவித தத்வமஸி வாக்யார்த்தம்
கம்ஸாதி துஷ்ட நிபர்ஹண மிஷ்டதம். (பும்ஸா)

2. கல்யாண காந்தி லக்ஷ்ம்யங்கித வக்ஷஸம்
கல்யாணராம ஸமர்ச்சித பாதபத்மம் (பும்ஸா)

(சிம்மாசனத்திற்கு சமீபம் போய் மஹேந்திரனை ஆசீர்வதித்து.)

அகிலாண்டகோடி பிர்மாண்ட நாயகனுக்கு ப்ரதிநிதி
யாய் விளங்கும் அமரேசா ! நிகில பூர்புவஸ்வர் லோகங்
களுக்கு நித்ய மங்களதாயகனுகிய ஸஹஸ்ராக்ஷனே ! ஜய
விஜயீபவ ! பராக் ! பராக் ! பராக் !

தேவேந்திரன் :— என்ன இன்றைக்கு நமக்கு ஸ்தோத்தி
ரம் அதிகமாய் இருக்கிறதே ?

நாரதர் :— காரியம் இருக்கிறது. ஸ்தோத்ரம் பண்ணுகிறேன்.

தேவேந்திரன் :— ஸ்தோத்ரத்தினல் கார்யமாய்விடுமா? ஸ்வாமி!

நாரதர் :— திவ்யமாய் ஆகும். யார்தான் ஸ்தோத்திரத்திற்குக் கட்டுப் படவில்லே? எங்கள் கண்ணனை விடவா?

தேவேந்திரன் :— நீங்கள் வந்திருக்கிறது உங்கள் கார்யமா? கண்ணபிரான் கார்யமா?

நாரதர் :— எனக்குச் சொந்தமான கார்யமென்பதேகிடையாது. எல்லாம் மாதவன் கொடுத்ததுதான். அப்பாண்டவர் சகாயரது வேலேதான்.

தேவேந்திரன் :— சரிதான். சரிதான். சித்ரசேனன் சொல்லவந்ததுதான். துர்யோதனன் பெருமை நாடகமாய்த்தானதிருக்கும்?

நாரதர் :— நீங்கள் எங்கள் கண்ணனுக்கும் அண்ணன் அல்லவா? எல்லாம் சொல்வதற்கு முந்தியே தெரிந்து விடுகிறது.

தேவேந்திரன் :— ஆமாம். நீங்கள் சொல்வது சரியே. அந்தத் துர்யோதனனை என்ன செய்யவேண்டும் என்கிறீர்கள்?

நாரதர் :— வேறென்ன வேண்டும்! இனி விஷமம் செய்ய முடியாமல் கட்டிப்போட்டு விடவேண்டும். கல்பகாலத்திலும் விடக்கூடாது.

தேவேந்திரன் .— (சித்ரசேனனே பார்த்து) சித்ரசேன! நாரதர் சொல்வதைக் கேட்டனேயா? துர்யோதனன்

என்றால் இப்படிஇருக்கிறது எல்லோருக்கும். பாவம் அவன் பிறந்த லக்னம் அது. (நாரதரைப் பார்த்து) ஸ்வாமின்! உங்கள் இஷ்டப்படியே நடத்துகிறேன். விதுரரிடம் போய் காரியம் பலித்ததென்று நீங்கள் சொல்லி விடலாம்.

நாரதர் :— மகாபாக்யம்! மகாபாக்கியம். என்காட்டில் மழைபெய்தது. (பாடுதல்)

பிலஹரி ஆதி.

1. தூபம் போடுவதென்வேலை, தூள்பறக்கச் செய்வததன்வேலை
சாபம் கொடாமலே நான் பிறரைக்கொண்டு சாதிக்கிறே
[னீசன் இஷ்டங்களை.

2. சித்ரசேனன் போவான் சித்திரமாகவே போர்புரிந்து
பத்திரமாகவே கட்டிப் பிடித்தந்தப் பாதகனைச் சிறை
[வைத்திடுவான்.

3. கல்யாணராமன் கொண்டாடும் கண்ணனைப் பாடிவிட்டு
செல்கின்றேனிந்த வேடிக்கை பார்த்திட ஜல்ஜல்லென்று
[மனோரதத்தில்.

நல்லது நான் போய் வருகிறேன். நான் வந்த காரியம் ஆயிற்று.

தேவேந்திரன் :—போய் வாருங்கள். நாளைக்கு க்ருதாசியின் நர்த்தன மிங்கே! மறவாமல் வந்து சேருங்கள்.

(போதல்)

(சபைகலைதல் - திரைவிடுதல்.)

அங்கம் 3. அரங்கம் 3.

இடம். தடாகக்கரையில் துர்யோதனனுக்காகக் கட்டிய வசந்த மண்டபம்.

காலம். காலை.

விஜயத்வஜன் காவல் காக்கிறான்.

(மூன்று கந்தர்வர்களுடன் பிரவேசித்து)

சித்ரசேனன் :—(விஜயத்வஜனைப் பார்த்து) நீ யாரப்பா?

1. கந்தர்வர் .—இந்தக் கட்டடம் யாரதப்பா?

2. கந்தர்வர் :—நேற்று இங்கு வந்தபோது இதைக் காணோமே?

3. கந்தர்வர் :—வெகு ஜரூராய் வேலை நடந்திருக்கிறது.

விஜய :—அய்யா! நில்லுங்க. நீங்களே பேசுறீங்களே. நான் யாரென்னு கேட்டீங்கன்னா. நான் விசயன். இந்தக் கட்டடம் யாருதெங்கிறீங்களா? நம்ம மகாராசா துரியோதனரு இக்குறாரல்ல? அவங்க கட்டச்சொன்னதுங்க. ராவிலேயே வேலை முடிஞ்சு போச்சுங்க.

சித்ரசேனன் :—என்னமாய் முடிந்ததப்பா?

1. கந்தர்வன் :—யக்ஷிணி கட்டி இருக்கும்.

2. கந்தர்வன் :—இல்லை. இல்லை. பிசாசு கொணர்ந்து கொட்டியிருக்கும்.

3. கந்தர்வன் :—இவன்தான் சொல்லட்டுமே.

விஜயன் :—கேக்கிறீங்களா? சொல்றேனுங்க. அவசரப் படாதீங்களே. எங்க மவராசாக்கு அசுரங்களெல்

லாம் ஸ்னேகம். அவங்க வேலே இது. எல்லாம் பொன சுருட்டு வேலேங்க. மலேக்காதீங்க. நல்லது. இங்கணே நிக்காதீங்க. போங்க. அவங்க வருவாங்க.

சித்ரசேனன் :—எதற்கப்பா வருகிறுர்கள்?

1. கந்தர்வன் :—மீன் பிடிக்கவா ?

2. கந்தர்வன் .—இல்லே இல்லே. கரடி பழகுவார்கள்.

3. கந்தர்வன் :—நீதான் சொல்லேனப்பா?

விஜய :—பவுசு காட்ட வரப்போருங்களாம். பவுசு காட்ட.

சித்ரசேனன் :—யாருக்கப்பா?

விஜய :—அதோ அங்கணே இக்குருங்க பாருங்க அந்தத் தோப்பிலே ? பாண்டவங்க எங்கிருங்களே. அவங்களுக்குங்க.

சித்ரசேனன் :—அவர்களோடுகூட ஒரு பெண்மணி இருக்கிருள் அல்லவா?

விஜய :—ஆமாம். மறந்துட்டேனுங்க. அவங்களுக்கும் தானுங்க?

1. கந்தர்வன் :—பவுசு என்றுல் என்னப்பா?

2. கந்தர்வன் :—அதை என்ன தூக்கிக்கொண்டா வருவார்கள் ?

3. கந்தர்வன் :—சொல்லப்பா நீ. இவர்கள் கிடக்கிறுர்கள்.

விஜய :—பவுசண்ணு ! சொல்லட்டுங்களா ? ஆம்பிள்ளேங்களும் பொம்பிள்ளேங்களுமா கூட்டமா வர்றது. சும்மா வர்ரதுங்கிருங்களா? இல்லேங்க. சரிகை வேட்டி, சாதரு, துப்பட்டா எங்கிருங்களே. அதெல்லாம் போட்டுக்கிறதுங்க. அத்தரு, புனுகு, ஜவ்

வாது இதல்லாத்தையும் வாரி வாரி மேலெல்லாம் கொட்டிக்கிறதுங்க. தெரிஞ்சுதுங்களா? எல்லாரும் டாக்டீக்ன்னு இப்படி நடக்குறதுங்க (நடந்து காட்டுகிருன்) போற்றதுங்க. வரதுங்க. இப்படிச் சித்தாதுங்க. (அபிநயிக்கிருன்) தெரியுதுங்களா? துணியெல்லாம் காத்துலே பறக்கணுங்க! ஜம் ஜம்மிண்டல்லா வாசனே வீசுங்க! சித்த ஙிப்பாங்க. சித்தப்பாடுவாங்க. சித்த ஹா ஹா ஹா என்னு சிரிப்பாங்க. இதுதானுங்க பவுசு. பிடிச்சுக்குங்க.

சித்ரசேனன் :—பிடித்துக்கொண்டோம் அப்பா கெட்டிபாய்.

1. கந்தர்வன் :—இப்படியே காட்டுவார்களா?

2. கந்தர்வன் :—ரொம்ப பாரமாயிருக்குமே.

3. கந்தர்வன் :—அப்புறம் சொல்லப்பா?

விஜய :—காட்டருங்களா ? காட்டினுக்க! இங்கணே இருக்காங்களே அந்த பாண்டவருங்க! அப்படியே இவங்க வயிறு வெடிச்சிப் போவாங்களாம். அந்த அம்மா இக்குருங்களே ; அப்புறம் ஏந்திருக்கக்கூட மாட்டாங்களாம்.

சித்ரசேனன் :—அப்படியானுல் ?

விஜய :—அப்படியாச்சு துன்னுக்க! சொல்லவேணுமா? எங்க ராசாவை அப்பறம் கட்டிப் பிடிக்க முடியாதுங்க.

1. கந்தாவன் :—இப்பொழுதே கட்டிப் பிடித்துவிட்டால்?

2. கந்தர்வன் :—கட்டி அடித்தும் விட்டால்?

3. கந்தர்வன் :—இப்படியேதானப்பா நடக்கப் போகிறதோ?

விஜய :—அது எங்கிருக்குதுங்க? சும்மா கேலிக்கல்லா சொன்னேனுங்க. அவங்க வருவாங்க இப்போ. நீங்க போய்டுங்களே.

1. கந்தர்வன் :—போகமாட்டோம்.

2. கந்தர்வன் :—இங்குதான் இருப்போம்.

3. கந்தர்வன் :—கால் கடுக்கிறது. சற்று மண்டபத்தில் போய் உட்காரலாமே.

விஜய :—நீங்க போமாட்டேன்னுக்கா நான் என்ன பண்ணறதுங்க? நல்லாப் போயுக்காருங்க. நான் இதைத் தலேலியா தூக்கிட்ருக்கிறேன்? நான் அவங்களைத் தேடிக்கிட்டுப் போருப்பிலே போய்ட்றேனுங்க.

(போதல்)

(திரைவிடுதல்)

மூன்றுவதங்கம் ஸம்பூர்ணம்

ஸ்ரீ:

ஸ்ரீ:

அங்கம் 4. அரங்கம் 1.

இடம். கோபர்கள் கூடியிருக்கும் ஒரு கல்யாணப் பந்தல்.

காலம். மாலை.

(துர்யோதன ராஜன், கர்ணன், சகுனி, துச்சாஸனன் இவர்கள் வீற்றிருக்கிறார்கள்.)

துர்யோதன ராஜன் :— கோபாலர்களே! மெத்தவும் சந்தோஷித்தோம். மாடுகன்றுகளை யெல்லாம் வெகு நன்றாக வைத்துக்கொண் டிருக்கிறீர்கள். எல்லா வற்றையும் நாம் நேரில் பார்வையிட்டோம். அந்தக் கிச்சாமியின் காளைக்கன்று நமக்கு ரொம்பப் பிடித் திருக்கிறது.

கோபர் தலைவன் :— (முன்வந்து கும்பிட்டுவிட்டு) ஏலே கிச்சாமி! கேட்டுக்கிட்டயா? நாளைக்கே நம்ம மகாராசா வீட்டுக்கு உன் காளைக்கன்னை ஓட்டிடு. அடே குமுதா! இங்கணே வா! நம்மவீட்டு வுச்சிமிமாடு இருக்குதே. அதுபால் நல்லாயிருக்கும். கறந்து சுடச்சுடாவைச்சுருக்கேன். எஜமான்களுக்கு அதைக் கொடுக்கணும். எடுத்துட்டுவா. (பால்வருகிறது. பாத்ரங்களும் வருகின்றன தலைவன் கொடுக்க எல்லோரும் வாங்கிக் குடிக்கிறார்கள்.)

துர்யோதனன் :— வெகு ருசியாயிருக்கிறது.

துச்சாஸனன் :— ரொம்பத்தரமா யிருக்கிறது.

கர்ணன் :— அமிருதமென்றே சொல்லலாம். நாளைக்கு நீ வரும்போது இந்தப்பாலில் கொஞ்சம் கொண்டு வருகிறாயா?

கோபர்தலைவன் :—மாட்டையும் கன்னையும் ஒட்டிவிட்டுட்றேனுங்க. எசமான்களுக்கித்தானே நாங்க வளக்கிறோம். ஏ குட்டி மோகனம்! இங்கிட்டுவா. மகாராசரெல்லாம் கேக்கட்டும். கொஞ்சம் பாடு.

மோகனம்— (கிட்டவந்து) அய்யா! கும்பிட்றேனுங்க. பாடட்டுங்களா? (பாடுதல்)

கோம்மி மெட்டு.

ஆயர்குலப்பிள்ளை ஒன்று - அது
மேயவிடும் மாடு கன்று;
ஓயாமலே வெண்ணெய்தின்று - அது
மாயங்கள் பலவும் செய்யும்.

பாதிநிசி வேளையிலும் - அது
ஊதிப் புல்லாங் குழலை
ப்ரீதியுள்ள கோபிமார்க்குப் பல
மாதிரியாய்ப் பாடி ஆடும்.

காட்டில் அலைந்துகொண்டே - தன்
பாட்டில் ச்ருதி மாற்றிக்கொண்டே -
நாட்டை எல்லாம் அங்கிழுத்து - அது
கூட்டி நன்றாய் ஆட்டி வைக்கும்.

நல்ல நல்ல ராகங்களைக் கவி
கல்யாணராமன் கொடுக்க
கல்லும் உருக அது ராக
மாலிகைகளைத் தொடுக்கும். (ஆயர்)

கர்ணன் :— நம் கண்ணனை அல்லவோ இந்தப்பெண் பாடுகிறது?

துர்யோதனன் :— நல்லதாயிற்று. அவன் இன்ன ஜாதி என்பது வெள்ளிடை மலையாய் இப்பொழுது வெளியாய் விட்டது.

சகுனி :— அவன் திருட்டுப் புரட்டெல்லாம் இந்தப் பாட்டில் வரக்காணோமே?

துச்சாஸனன் :— அடுத்த பாட்டில் வரும்.

கோபத்தலைவன் :— மகளே! சிங்காரம்! இங்குவா! நீ ஒருபாட்டுப் பாடு. மகாராசால்லா கேக்கணும்.

சிங்காரம் :— (சமீபம்வந்து கும்பிட்டு) பாட்றேன் பாருங்க. நல்லாருக்குங்க. (பாடுதல்)

இந்துஸ்தான் காபி. ரூபகம்.

1. நள்ளிரவில் ஓரிடத்தில் நம்மள் சாதிப்பிள்ளை
கள்ளத்தனமாய்ப் பிறந்து கோகுலம் வந்ததே.

2. அண்ணி அசோதை எடுத்து ஆவலுடன் அதையும்
வெண்ணெயும் பாலும் கொடுத்து வேண்டி வேண்டி
வளர்த்தாள்.

67885

3. ஊட்டவிட்டுக் கன்றை அது ஊதிக்கொண்டே குழலைக்
காடுமேடெல்லாம் திரியும் கண்ட பெண்களோடு.

4. கொட்டமடித்தாடு [illegible]தைக் கொண்டமட்டும் பாடித்
திட்டமாய்க் கல்யாணராமன் திவ்ய கவி ஆவான்.

துச்சாசனன் :— அண்ணா! வந்துவிட்டது பாருங்கள் நான் சொன்னபடி?

சகுனி :— எங்கே அதை எல்லாம் ஒளிக்கிறது?

கர்ணன் :— இன்னம் யாராவது ஒரு பாட்டுப் பாடட்டும்.

கோபத்தலைவன் :— ஏலே சிங்கக்குட்டி! இங்குவந்து ஒருபாட்டு பாட்றையா?

சிங்கக்குட்டி :— நல்லதுங்க (பாடுகிறான்)

நொண்டிச் சிந்து.

அண்ணே! அண்ணே! வாங்க! வாங்க! அங்கக்
கண்ணாளம் நடக்குதாம் கணபதிக்கு
கொழக்கட்டை ரொம்ப ரொம்ப - அண்ணே!
மழமழ வெண்டு தட்டில் வைச்சிருக்குதாம்.
ரொம்ப ருசியாயிருக்குதாம் - அங்கு
தேங்காய்களுடைவது கணக்கில்லையாம்.
தெறிச்சுத் தெறிச்சு விழுதாம் - அதைக்
கூட்டமாய் நம்மசனம் ஓடி ஓடி - அண்ணே!
கூட்டி எடுத்துத் திண்ணுதாம் - நம்ம
அண்ணிமக வல்லவதான் மணப் பெண்ணுமாம்;
கண்ணுக்குநல்லாயிருக்குமாம் - இது
கண்ணுகொள்ளாக் காச்சின்னு காணவந்தாரும்
கண்ணன் அண்ணன் கல்யாணராமன் - அவன்
நல்லார்க்கும் அல்லாருக்கும் எல்லாருக்குமே இனிக்
கல்யாணம் ஆகுமெண்டாணும்.

துர்யோதனன் :— பேஷ். பேஷ். சபாஷ். சிங்கக்குட்டியா இவன்?

கர்ணன் :— பிள்ளையாருக்குக்கூட அல்லவா கல்யாணம் பண்ணி வைத்துவிட்டான்? சிங்கக்குட்டி தான் இவன்.

துச்சாசனன் :— பிள்ளையாருக்குக் கல்யாணம் என்றால் இனி நமது தாத்தா பீஷ்மருக்குக் கூடத்தான் கல்யாணம் நடக்கும்.

சகுனி :— நல்லது போவோம் நம் புது மண்டபத்திற்கு. நேரமாகவில்லையா ?

துர்யோதனன் :— கோபாலர்களே! சந்தோஷம். நீங்கள் எல்லாம் போகலாம். நாங்களும் போய் வருகிறோம்.

(போதல்.)

அங்கம் 4. அரங்கம் 2.

இடம். துர்யோதனன் வசந்த மண்டபம்.

காலம். முன் பகல்.

(சித்ரசேனனும் கந்தர்வர்களும் உலாத்திக் கொண்டிருக்கிறார்கள். விஜயன் வருகிறான்.)

விஜய :— அய்யா! அவங்களெல்லாம் வராங்க.

சித்ரசேனன் :— எங்கப்பா?

1. கந்தர்வன் :— எதற்காகவப்பா?

2. கந்தர்வன் :— அடிபடத்தான்.

3. கந்தர்வன் :— யார்! துர்யோதனாதிகளா வருகிறார்கள்?

விஜய :— ஆமானுங்க. இங்கணே தான் அவங்களுக்கு ஜலக்ரீடை நடக்கணுமாம். பெண்டுங்ககூட வராங்க. இந்த இடத்தை அவங்கதான் பாத்துவச்சு இந்த மண்டபம் கட்டினாங்க!

1. கந்தர்வன் .— அதற்கு முந்தியே இது எங்கள் இடம் தெரியுமா?

2. கந்தர்வன் :— இடம் யாருதென்று விசாரிக்காமலே கட்டடம் கட்டிவிட்டால் ஆகிவிட்டதா?

3. கந்தர்வன் :— நமக்குத்தான் கட்டினதாய் இருக்கட்டுமே.

சித்ரசேனன் :— கந்தர்வர்கள் இதைப்பிடித்துக் கொண்டுவிட்டார்கள். விடமாட்டோமென்கிறூர்கள் என்றுபோய்ச்சொல்.

1. கந்தர்வன் :— இங்குவரக்கூடாதென்று சொல்லிவிடு.

2. கந்தர்வன் :— எங்கள்மண்டப மிதென்று போய்ச்சொல்.

3. கந்தர்வன் :— எங்கிருக்கின்றூர்கள் அவர்கள் ?

விஜய .— இதோ தெரியுதுங்களே காடு? அங்கணே தான் வந்துகொண்டிருக்காங்க. இப்பொத்தான் இடையர் வீட்டுக்கல்லாம் போய் வெண்ணே பால் அல்லாம் குடிச்சுட்டு வராங்க. என்னே வைவாங்க. போய்டுங்களேன்.

சித்ரசேனன் :— நீ போய் எது வேண்டுமானுலும் அவர்களிடம் சொல்லிக்கொள். நாங்கள் போக மாட்டோம்.

1. கந்தர்வன் :— அவர்களும் இங்கு வரமுடியாதென்று சொல்லிப்போடு.

2. கந்தர்வன் :— வந்தால் நன்றுய் விழும் என்று சொல்லிவிடு.

விஜய :— என்ன விழும் சாமி ?

3. கந்தர்வன் :— என்னவிழுமா ? அடி, தெப்பல்.

1. கந்தர்வன் :— குத்து, குழக்கட்டை.

விஜய :— இப்படியே போய்ச் சொல்லட்டுங்களா ?

சித்ரசேனன் :— நன்ருய்ச் சொல். இன்னம் உனக்குத் தோன்றினபடி சேர்த்து வேண்டுமானுலும் சொல்.

விஜய :— அய்யா! நான் போறேனுங்க. இப்படியே சொல்றேனுங்க. கோபிச்சுக்காதேயுங்க.

(போதல்)

அங்கம் 4. அரங்கம் 3.

இடம். ஒரு காட்டுப்பாதை.

காலம். மத்தியானம்.

(துர்யோதனன் சகுனி துச்சாசனன் கர்ணன் வருகிருர்கள். விஜயன் எதிர் செல்கிருன்.)

சகுனி :— ஏன் போவோமே! ஏன் இங்கே தயங்கி நிற்க வேண்டும்?

துர்யோதனன் :— புறப்பட்டேன். கால் தடுக்கிக் காயம் ஆய்விட்டது. அதனுல் யோசிக்கிறேன்.

கர்ணன் :— ஒருபூனையும் குறுக்கிட்டது. ஓடி ஓடி விரட்டிப் பார்த்தும அது ஏமாற்றிவிட்டுக் குறுக்காய்த் தான் போயிற்று.

துச்சாசனன் :— இப்படி மீனமேஷம் பார்த்துக்கொண்டிருந்தால் எந்தக் கார்யம்தான் ஆகும்?

(பிரவேசித்து)

விஜயன் :— மகாராஜா! நாம் போகவேண்டாமக!

துர்யோதனன் :— ஏனடா? என்னடா சங்கதி?

விஜயன் :— என்ன சங்கதிங்க! பேசாமல் ஊருக்குப் போய்டுவோம். வாங்க.

சகுனி :— என்னடா தடுக்கிருய்?

விஜயன் :— மகாராஜா! இவங்க சொல்றதெல்லாம் கேக்காதேங்க. நான் சொல்றேன் கேளுங்க. அவங்க கந்தர்வங்களாம். ஒரே கூட்டமாய் இருக்கிருங்க. அவங்களெல்லாம் தேவங்களாமல்ல?

சகுனி :— ஆமாம். ஆனல் என்னடா?

விஜய :— அத அப்புறம் சொல்றேனுங்க. நாம் திரும்பூடுவோங்க.

துச்சாசனன் :— என்னடா பயங்காளி! உளறுகிருய். போனல் என்னடா?

விஜய :— போனல் சொல்லட்டேங்களா? போனல் விழுங்க.

துர்யோதனன் :— என்னடா விழும்?

விஜய :— அடி குத்து தப்பல் விழுங்களாம். அப்படி அவங்க சொல்ருங்க.

சகுனி :— துர்யோதன! மலேக்கவேண்டாம். வெறும் பேச்சு இது. கந்தர்வர்கள் தேவபாடகர்கள். இவர்களுக்கு யுத்தமென்ன தெரியும்?

கர்ணன் :— நம்மைக்கண்டதும் ஓட்டம் பிடிப்பார்கள்.

விஜய :— மகாராஜா! அப்படிச் சொல்லக்கூடாதுங்க. அவங்களல்லாம் வில்லாதி வில்லங்க. பொசுக்கிடுவாங்க.

துச்சாசனன் :— இவன் கிடக்கிறுன் அண்ண! போவோம் வாருங்கள்.

(எல்லாரும் புறப்பட்டு நடக்க
துர்யோதனன் திடுக்கிட்டு நிற்கிறான்.)

சகுனி :— ஏன் துர்யோதனா ! பின்வாங்குகின்றாய் ?

துர்யோதனன் :— சகுனங்கள் விபரீதமாய் இருக்கின்றனவே ?

துச்சாசன்ன் :— சகுனமாவது பிகுனமாவது ? இதெல்லாம் ஏன் பார்க்கவேண்டும் ?

துர்யோதனன் :— தம்பி ! அதப்படி யல்ல. எப்படியிருந்தாலும் இருக்கட்டும். போவோம் வா.

கர்ணன் :— நானிருக்கிறேன். பயப்படாதே.

(எல்லோரும் போதல்)

அங்கம் 4. அரங்கம் 4.

இடம். ஒரு வனப்ரதேசம்.

காலம். மாலை.

(ப்ரவேசித்து)

கர்ணன் (பாடுதல்)

ப்யாகு. ஆதி

பல்லவி

இப்படி வருமென்று நான் எள்ளளவும் எண்ண இல்லை.
(இப்படி)

அனுபல்லவி

தப்பிப்பிழைத்து வந்ததே தம்பிரான் புண்யம் ஆயிற்றே.
(இப்படி)

சரணங்கள்

1. ஒப்பிலாச் சரமழையை ஒய்விலாது பெய்திடும்
ஒப்புயர்வற்ற நான் இப்போ உப்புக்கும் உதவமாட்டேன்.
(இப்படி)

2. என்ன சித்ரசேனன் கற்ற உன்னதமான வித்தையோ?
என்னை மயக்கித் தள்ளிக்கொண்டிங்கு வீழவடித்ததே!
(இப்படி)

3. கல்யாணராமன் கொண்டாடும் கண்ணன் அருள்பெற்றி
[ருந்தால்
அல்லாடுவேனே இவ்விதம் ஆருமறியா ஏழைபோல்?
(இப்படி)

(பெருமூச்சு விட்டுக்கொண்டு) ஆ! இப்படி எல்லாம் ஆகும் என்று நான் ஸ்வப்னத்திலும் எண்ண இல்லையே? என் வீர்யமும் பிரதாபமும் போன இடம் தெரியவில்லையே? துர்யோதனன் போவதற்குத் தயங்கினனே. நின்றிருக்கக் கூடாதா? வீணாய் அவனையும் கெடுத்து என்னையும் கெடுத்துக் கொண்டேனே! அவன் கக்ஷியிலிருக்கும் நம்மால் அவனுக்கு ஒரு உதவியும் செய்ய முடியவில்லையே! என்ன ப்ரயோசனம்! அபாரமாய்த்தான் யுத்தம் செய்தேன். கந்தர்வ ஸைன்யங்களை விரட்டிவிரட்டிக் கலகலத்தோடவும் அடித்தேன். என் பாணங்கள் சீறிக்கொண்டுபோய் ஆகாயத்தில் பாய்ந்து அந்த வீரர்களை யெல்லாம் கால் வேறு தலை வேறு உடல் வேறு என்றாக்கி நண்டல் பிண்டலாய்த் தான் விழச் செய்தன. அந்த கந்தர்வர்கள் கையில் இருந்த வீணை சல்லரி ம்ருதங்கம் கின்னரி எல்லாம்

சுக்குத் தூளாய்த்தான் சிதறிப்போயின. இந்தச் சித்ரசேனன் மாத்திரம் வராமல் இருந்தால் ஜயபேரி அடித்துக்கொண்டு திரும்பியிருப்பேன். திடீரென்று எங்கிருந்தோ வந்து முளைத்தானே இவன்? எவ்வளவோ சாமர்த்தியமாய் யுத்தம் செய்தும் இவனிடத்தில் பயன்படவில்லையே. ஏதோ ஒரு மாயாஸ்திரத்தை விட்டான். என்னமகிமை அதற்கு? கெட்டியாய்க் குறவளையைப் பிடித்துக்கொண்டுவந்து இவ்வளவுதூரத்தில் தள்ளிப்போட்டதே! நல்ல வேளையாய் இப்பொழுது அதன்பிடியை விட்டுவிட்டது. அதனால் நான் மூச்சு விடுகிறேன். ஆ! நிற்கவும் முடியவில்லையே (மெல்ல உட்கார்ந்து கிளையினால் சாய்ந்து கொள்கிறான்.)

(சகுனி பிரவேசிக்கிறான்.)

கர்ணன் :— (தலை எடுத்துப் பார்த்து) யாரதோ சகுனியோ வருகிறது?

சகுனி :— (கிட்டவந்து) கர்ணா! என்ன இப்படிப் படுத்து விட்டாய்?

கர்ணன் :— சொல்கிறேன். உன் சங்கதி என்ன சொல்? நீயும் யுத்தம் செய்தாய் அல்லவா?

சகுனி :— நானாவது யுத்தம் செய்யவாவது? அதுவும் அந்தக்கிராதகர்களான கந்தர்வர்களோடவா? ஏதோ தமாஷாய் உட்கார்ந்து சொக்கட்டான் கிக்கட்டான் ஆடுவேன். யுத்தமா! அந்த ஜோலிக்கே நான் போகவில்லை.

கர்ணன் :— துர்யோதனன் என்ன செய்கிறான்?

சகுனி :— துர்யோதனனாவது கிர்யோதனனாவது! யார் பார்த்தது அவனை? நான் கிளி பிடித்தோடி வந்தது எனக்குத் தெரியும். என்னமோ கேட்கிறாய்? அது கிடக்கிறது. நீ என்ன செய்தாய்?

கர்ணன் :— பார்வையிலேயே உனக்குத் தெரியவில்லையா? கூடியமட்டும் வெகு தீவிரமாய் யுத்தம்செய்து கந்தர்வர்களைப் பிரளயமாடினேன். அதற்குள் அந்தச் சித்ரசேனன் வந்துவிட்டான். அவன் என்னமோ அஸஹாயசூரனாய்த்தான் இருக்கிறான். ஏதோ ஒரு பாணத்தை விட்டான். அது அப்படியே மயக்கி என்னை இங்குக் கொண்டுவந்து தள்ளிவிட்டது. இப்பொழுது தான் மெல்ல எழுந்தேன்.

சகுனி :— அதேன் இப்படியெல்லாம் நமக்கு ஆகிறது? நமது வீர்ய சௌர்யமெல்லாம் ஏன் வீணாய்ப் போகிறது?

கர்ணன் :— அதென்னப்பா? கைப்புண்ணுக்குக் கண்ணாடி வேண்டுமா? நாம் அதர்ம வழியிலே போகிறோம். அதனால் எல்லாம் நமக்குக் கெட்டுப்போய் விடுகிறது. தர்மமே ஜயமென்று தர்மபுத்திராதிகள் இருக்கின்றார்கள். அவர்களைத் தர்மம் தலைகாக்கின்றது- பாரேன்! என்ன சிறப்பாய் வந்தோம்? இப்பொழுதென்ன சிரிப்பாய் நாம் சிரிக்கிறோம்? அவர்களிடம் அண்டக்கூட முடியாமல் அடிக்கிறதே நம்மைத்தெய்வங்கள்.

சகுனி :— துர்யோதனனாவது ஜயத்துடன் வரமாட்டானா? பார்ப்போம்.

கர்ணன் :— வரலாம். ஆனல் எனக்கு நம்புதல் இல்லை. அவனுக்காகத்தானே நாம் அதர்மத்தில் தலைகொடுக்கிறோம். நமது கதி என்ன ஆயிற்று ? (பாடுதல்)

(மாங்காய்ப்பால் மெட்டு)

1. தர்மமே ஜயமென்று தர்மபுத்திரன் நம்பி
ஸர்வமும் ஸாதிக்கின்றார் - சுகமாய்
ஸர்வமும் ஸாதிக்கின்றார்.

2. தர்ம நினைவேயின்றித் தன்னையும் நம்மையும்
துர்யோதனன் கெடுக்கின்றான் - தினமும்
துர்யோதனன் கெடுக்கின்றான்.

3. தைர்யமெலாம் ஒடுங்கி தைன்யம் தலைமேலாகித்
தவிப்பாய் தவிக்கின்றோம் நாம். சகுனி!
தவிப்பாய் தவிக்கின்றோம் நாம்.

4. கல்யாணராமன் கானம்செய்யும் கண்ணன் நினைவே
இல்லாமல் இப்படி யானோம் - நிஜமாய்
இலலாமல் இப்படி யானோம்.

(போதல்.)

நாலாவது அங்கம் ஸம்பூர்ணம்

ஸ்ரீ:

ஸ்ரீ:

அங்கம் 5. அரங்கம் 1.

இடம். பாண்டவர் ஆச்ரமத்தின் வாசல் வழி.

காலம். காலை.

(இரண்டு கந்தர்வ சிப்பாய்கள் உருவின கத்தியோடு இருபுரமும் வர துர்யோதன ராஜன் பிரவேசித்தல்.)

முதல்சிப்பாய் :— வாருங்கள். வாருங்கள். நேரமாகிறது.

இரண்டாம் சிப்பாய் :— இப்படி மெதுவாய் வந்தால் நாங்கள் என்ன செய்கிறது?

துர்யோதனன் :— நடந்து வழக்கம் இல்லையப்பா!

முதல் சிப்பாய் :— பாவம்!

இரண்டாவது சிப்பாய் : எல்லாம் வேளைப்பலன்.

துர்யோதனன் :— நான் இந்தப் பூமண்டலத்திற் கெல்லாம் சக்ரவர்த்தி என்று தெரியுமா?

முதல் சிப்பாய் :— தெரியும். நன்றாய்த் தெரியும்.

இரண்டாம் சிப்பாய் :— அந்தப் பாண்டவர் ஆண்ட ராஜ்யம் தானே நீங்கள் கொள்ளையடித்துக்கொண்டது?

முதல் சிப்பாய் :— இந்த வம்பெல்லாம் நமக்கு வேண்டாம் அப்பா!

இரண்டாம் சிப்பாய் :— உலைவாயை மூடலாம். ஊர் வாயை மூடமுடியுமா? முடியாது.

துர்யோதனன் :— நம்மை எப்போ விடப்போகிறீர்கள்?

முதல் சிப்பாய் :— எங்கே விடுவதற்கு வழி இருக்கிறது? எங்களுக்கு அதிகாரம் இல்லையே.

இரண்டாம் சிப்பாய் :— உங்களைத்தான் ஏழரை பிடித்து விட்டதே? இல்லாவிட்டால் இப்படியெல்லாம் நடக்குமா? யோசியுங்கள். வாருங்கள். வாருங்கள்.

துர்யோதனன் :— ஏ சிப்பாய்! நீ நல்லவனைத் தோன்றுகிருய். சற்று நில். அதோ அந்த இடத்தில் யாரிருக்கிருர்கள் சொல்? (சுட்டிக் காட்டுகிருன்).

முதல் சிப்பாய் : — யாரா? உங்கள் பங்காளிகளான பாண்டவாகள் தான் இங்கு இருக்கிருர்கள்.

இரண்டாம் சிப்பாய் :— அந்த தர்மராஜன் பீமன் அர்ஜுனன் த்ரௌபதிஅம்மாள் எல்லாரும் தான் இங்கே இருக்கிருர்கள்.

துர்யோதனன் :— ஆனல் சற்று நில்லுங்கள். (உரத்த குரலால்) அண்ணு தர்மநந்தனு? நான்தான் தம்பி துர்யோதனன். இந்தக் கந்தர்வர்களிடத்தில் அன்யாயமாய் அகப்பட்டுக் கொண்டேன். ஆ! மானம் போகிறதே? ஓடிவாருங்களேன். என்னை வந்து பாருங்களேன்! எனக்குவந்த மானவமானம் உங்களுக்கு இல்லையா? (தனக்குள்).

இந்துஸ்தான் காபி. ஆதி.

1. அண்ணனை அவமானம் செய்திட ஆடம்பரமாய் வந்து நான்
இப்போ அண்ணணையே கூவி யழைத்திட ஆருயிரும்
[ஒடுங்குதே.

2. மானம் போயிற்றே மந்தரும் ஏனை மதமாய்ச் சேவி செய்
[வார்களே!
ஏனெனக்கிந்த பொல்லாத்தோதகம்? ஏனிங்கு வரலாகி
[னேன்?

3. பிள்ளையாரைப் பிடிக்கப்போயொரு பேய்க் குரங்கை நான்
[செய்தேனே!
துள்ளிக் குளிக்கப்போய் இறங்கித்துடித்துச் சேற்றிலாழ்ந்
[தினேனே!

4. கல்யாணராமன் போற்றும் கண்ணன் காணுமலேதானி
[ருந்து மென்
பொல்லாத வினை சொல்லாமல் வந்து போட்டுக் கல்லா
[லடித்ததே.

(வெளிவாய்) பீமசேனு! நீ தான் வாயேன். அர்ஜுனு! நீ பரமதயாளுவாயிற்றே. ஓடிவாயேன்.

முதல் சிப்பாய் :— என்ன கூப்பிடக் கூப்பிட அவர்கள் ஏனென்று கேட்கக் காணுமே?

இரண்டாம் சிப்பாய் :— எப்படி அவர்கள் வருவார்கள்? அவர்களைக் கேவலமாய் அடித்து விரட்டினுர்களே இவர்கள். அதற்காகவா?

துர்யோதனன் :— (தணறிக்கொண்டு தீனமாய்) சரி, போவோம் வாருங்கள்.

முதல் சிப்பாய் :— மகாராஜா! நிஜமாய்ச் சொல்கிறோம் நாங்கள். எங்களுக்கு உங்களை இப்படி அழைத்து வருவதிற்கு மனதே இல்லை.

இரண்டாம் சிப்பாய் :— என்ன நாங்கள் செய்கிறது? எங்கள் ராசா சொல்படித்தான் நாங்கள் கேட்கவேண்

டும். உங்களை அந்தக் கடவுள் தான் கண்பார்க்கவேண்டும், வாருங்கள். அதோ யாரோ உங்களைத்தான் தேடிக்கொண்டு வருகிறார்கள்.

(பிரவேசித்து)

சிந்துலாமாத்யர் :—மகாராஜா ! நல்லவேளையாய் உங்களைக் கண்டேன். தேடாத இடமெல்லாம் தேடிக்கொண்டு வந்தேன். ஏ சிப்பாய்களா ? கொஞ்சம் மெல்லப் போய்க் கொண்டிருங்கள். நானிதோ பிந்தியே வருகிறேன்.

துர்யோதனன் :— தர்மண்ணா இதோ தெரியும் ஆச்ரமத்தில் தான் இருக்கிறாராம். கூப்பிட்டேன் கூப்பிட்டேன். காதில் படவில்லை போல் இருக்கிறது.

அமாத்யர் :— நல்லது நான்போய் வருகிறேன். அவரோ தயாநிதி. அவரைக்கொண்டே இதோ உங்களை ஒரு நொடிப்பொழுதில் விடுவிக்கிறேன். கவலையை விட்டுவிடுங்கள்.

துர்யோதனன் :— அமாத்ய ! நிதிபோல்தான் நீங்கள் சமயத்தில் வந்தீர்கள். இப்படிச் செய்கிறீர்களா ? உங்களுக்குப் பாதி ராஜ்யம் தருகிறேன்.

அமாத்யர் :— எனக்கொன்றும் வேண்டாம். மகாராஜா ஸ்வஸ்தமாய் இருந்தால்போதும். போய்வருகிறேன்.

(எல்லோரும் போதல்)

அங்கம் 5. அரங்கம் 2.

இடம். பாண்டவர்கள் ஆச்ரமம்.

(தர்மபுத்ரர் அர்ஜுனன் பீமசேனன் வீற்றிருக்க, த்ரௌபதி விசிறி போடுகிறாள்.)

தர்மபுத்திர ராஜன் :— பீமசேனா! என்ன நான் இவ்வளவு சொல்லியும் நீ முரண்டு கொள்கிறாய்? இது நன்றாக இல்லை. துர்யோதனனே தீனமாய் நம்மைக் கெஞ்சுகிறான். நாம் உதாசீனமாய் இருக்கலாமா? இது தர்ம மாகுமா?

த்ரௌபதி :— மகாராஜா! தர்மம் பொறுமை என்று இவைகளைத்தான் இரவும்பகலும் உபதேசிக்கிறீர்கள். தர்மத்திற்கு வரம்பு கிடையாதா? பொறுமைக்குக் கறையே இல்லையோ?

தேசிகதோடி. ஆதி.

பல்லவி

துர்யோதனனிடம் தயை தர்மம் ஆகாது - நாதா!

அனுபல்லவி

இரவும் பகலும் கெடுக்கவே நம்மை எண்ணிச்
சதிமோசங்களைச் செய்திடும் (துர்)

சரணங்கள்

1. தன்னைக் கொல்லவந்த பசுவைத் தயையிலாது
கொலைத்திடலாம் என்ற பெரியோர் வாக்ய
மிலையோ? இதுவும் தர்ம சூக்ஷ்மமிலையோ? (துர்)

2. கல்யாணராமன் கொண்டாடும் கண்ணன் கம்ஸனைத்
தீர்க்கவில்லையோ? கரகரவென்று சிசுபாலனின்
கண்டத்தில் சக்ராயுதம் பாயவில்லையோ? (தூர்)

தர்மபுத்ரர் :— நீ சொல்வது நியாயமே. பங்காளியையும் பனங்காயையும் பதம்பார்த்து வெட்டவேண்டும் என்று பழமொழியுண்டு. அப்படிப் பதமாகும்வரையில் நாம் பொறுக்கவே வேண்டும். (பாடுதல்)

கமாசு. ஆதி.

பல்லவி

பொறுமையே பூமியை யாளப்
பண்ணும் பொக்கிஷம்.

அனுபல்லவி

வருமை இதனை வாங்கித்தந்திட
வேற்கும் ஸ்ரீதனம். (பொறுமை)

சரணங்கள்

1. அருமையாயிதனை நாமும் அணிந்து கவசம் போல்
பெருமையாக வாழலாம்; நல்ல பேரும் வாங்கலாம்.
(பொறுமை)

2. கல்யாணராமன் ஸ்துதிக்கும் கண்ணன் அருளினை
கல்யாணி! நமக்குத் தருவதிந்த நன்மையே. (பொறுமை)

பீமசேனன் :— ஏதோ கெட்ட எண்ணத்தோடு தானே அவன் வந்தான்? ஏன் அவன் படக்கூடாது? யார் அதோ வருகிறது? (பார்த்து) அமாத்யரா? வாருங்கள், வாருங்கள்.

(பிரவேசித்து)

அமாத்யர் :— பீமராஜ! இப்படிப் பிரியமாய் என்னை அழைப்பது மாத்திரம் போதாது. கார்யமும் ஆக வேண்டும். தர்மநந்தனு! அகப்பட்டுக்கொண்டு விழிக்கிருர் உங்கள் தம்பி துர்யோதனன். ரொம்பப்பரிதாபமாய் இருக்கிறது. அந்தக்கந்தர்வர்கள் ஸ்திரீகளேயும் பிடித்துக் கொண்டார்கள். இதைச் சொல்ல ஓட்டமாய் ஓடிவந்தேன். துர்யோதனன் உங்களேச் சரணமாய் அடைகிருர். உடனே மீட்க வழிதேடுங்கள். இந்த பீமார்ஜுனர்கள் உடனே போகவேண்டும். ரதமோ, துரகமோ, ஆயுதங்களோ எல்லாம் நான் தருகிறேன்.

தர்மபுத்ரர் :— பீமசேனு! அர்ஜுனு! அமாத்யர் எவ்வளவு தயைப்படும்படி சொல்கிருர் பார்த்தீர்களா? போங்கள். போங்கள். அமாத்யா! நீங்களும் கூடவே போங்கள்.

பீமசேனன் :— அண்ணு! என்ன இப்படி அபாரமான தயை வந்துவிட்டது உங்களுக்கு இந்த அயோக்யனிடத்தில்? இவனு இரக்கத்துக்குத் தகுந்தவன்?

அர்ஜுனன் :— ஒரு நாளும் இல்லே.

த்ரௌபதி :— என்னே இன்னம் ஏதாவது அவன் படுத்தத்தான் இவர் தயை வழிகொடுக்கும். அந்த தூர்த்தன் துச்சாஸனன் இழுத்தபோது தலேப்பைக் கெட்டியாய்ப் பிடித்த கைகள் இன்னம் குழம்பிக் காண்கின்றன. இவருக்குச் சத்ருக்களிடம்தான் தயை. நம்மிடத்தில் ஈவு இரக்கம் என்பதே இருப்பதாய்த் தெரியவில்லே.

பீமசனன் :— அண்ணா! எதற்காக இரங்கவேணும் என்று யோசித்து யோசித்துப் பார்க்கிறேன். எனக்குப்புரியவில்லை. (பாடுதல்).

காம்போதி. ஆதி.

பல்லவி

எதற்கோ இரக்கம் அண்ணா! இந்த துர்யோதனனிடம்
இவனும் இதற்குப் பாத்ரனோ? (எதற்)

அனுபல்லவி

யதுகுல நாதன் கண்ணனுக்கிவன் பரமத்வேஷி
என்றும் நமக்கிவனேதான் ஈவிரக்கமிலாத்ரோகி. (எதற்)

சரணங்கள்

1. அன்றெனை ஆழ்ந்த நட்டாற்றில் அமிழ்த்திவிட்டானே
[அதற்கோ?
பன்னகங்களை என்மீது பாயவிட்டானே அதற்கோ?
கன்றிக்கருகும் அரக்குக் கட்டிடத்தில் வைத்ததற்கோ?
இன்றும் நம்மை ஏராளமாய் ஏசவந்தானே-அதற்கோ?
(எதற்)

2. கல்யாணராமன் கொண்டாடும் கண்ணனை மணிவண்ண
[னைக்
கல்லு முருக நம்தேவி கனத்த குரலால் அழைத்து
புல்லகமலாக்ஷன் வந்து புதிதாய்த்தரி போட்டு நூற்று
நல்லவேளையாய் உதவாவிடில் நம்கதிதான் என்ன?(எதற்)

இதெல்லாம் நிற்கட்டும். அமாத்யா! உங்களை ஒன்று கேட்கிறேன். சொல்லுங்கள். துர்யோதனன் தவிப்பது நிஜம்தான். குற்றம் இவன்பேரிலா? அல்லது அந்தக் கந்தர்வர்கள் பேரிலா?

அமாத்யர் :— எல்லாம் துர்யோதனன் குற்றம்தான். அந்தக் கந்தர்வர்கள்மீது இலேசமும் சொல்ல முடியாது. அவர்கள் விளையாடவந்த குளக்கரைக்குப் போய் அவர்களை வலுவில் சண்டைக்கிழுத்ததில் இந்த அனர்த்தம் வந்தது.

அர்ஜுனன் :— அது போகட்டும். இந்தப் பக்கம் இவன் நாடி வந்ததற்கு ஏதாவது சரியான காரணம் இருக்கிறதா? சொல்லுங்கள்.

அமாத்யர் :— வந்தது கோஷயாத்ரைக்கு என்று பேர் வைத்துக்கொண்டு. வாஸ்தவத்தில் வேறு கெட்ட எண்ணம் தான். சொன்னால் கொக்கின் தலையில் வெண்ணெயை வைத்துப் பிடிக்கிறது என்பதுபோல் வெட்கக்கேடாயிருக்கும்.

பீமசேனன் :— அண்ணா! பார்த்தீர்களா? என்ன தயைக்கிடமிருக்கிறது? இவன் துரெண்ணம் நிறைவேறாதபடி தெய்வமாயிருந்து கந்தர்வர்கள் சிக்ஷித்தார்கள். நாம் செய்யவேண்டியதைத்தான் அவர்கள் செய்திருக்கிறார்கள். அவர்கள் பரமோபகாரிகள் நமக்கு. அவர்களைப்போய் எதிர்க்கச் செய்கிறீர்களே? இதென்னந்யாயம்?

அமாத்யர் :—துர்யோதனனிடம் தயைப்படும்படி சொல்ல எனக்கும் இஷ்டமில்லை தான். அந்த ஸ்திரீகள்! அவர்கள் என்ன செய்வார்கள்? அவர்களுக் கேதாவது பங்கம் ஏற்பட்டால் நம் குலத்துக்கு இழிவாகுமே என்று சொல்லவந்தேன்.

தர்மபுத்ரர் :— அமாத்ய! நீர் சொல்வது நிரம்பவும் சரி. பீமார்ஜுனர்களே! தர்மமோ அதர்மமோ? நியா

யமோ அந்யாயமோ? நீங்கள் போகாவிட்டால் நானிதோ போகிறேன். எனக்கு வீர்ய மில்லாமல் போகவில்லை.

த்ரௌபதி :—(பீமார்ஜுனர்களைப் பார்த்து) நீங்கள் இரு வரும் இனித்தடை சொல்லலாகாது. உங்கள் அண் ணுவை மனுஷ்யனென்று நினைக்காதீர்கள். அவர் பேசும் ஸ்ரீ பரமேச்வரனுகவே இருக்கின்றுர். அவ ரைப்போல் நம்மில் யாராலும் இருக்கமுடியாது. அவர் மனம் கோணுது நடந்தால் முக்தி முதற் கொண்டு எதுவும் நமக்குப் பெரிதாகாது.

அர்ஜுனன் :— "நமக்குள்ளானல் நாம் ஐவரும் நூறு பேரும்; பிறர்வந்தால் நாம் நூற்றைந்து பேர்கள்" என்றும் அடிக்கடி அண்ணு சொல்லி வருகிறுர். அதை நாம் சரியாய் அறிந்தோம் இல்லை. அண்ணு வே நமக்குப் பிதா குரு தெய்வம் எதுவும் ஆகின் றுர். புறப்படுங்கள் போவோம்.

பீமசேனன் :— அண்ணு! போய்வருகிறேம். மன்னிக்க வேண்டும் என் அபராதங்களை. உங்கள் பாரி புத்தி எங்களுக்கு வரவில்லை. நயத்தில் பார்க்கிறேம். இல்லா விட்டால் ஜயித்தே வருகிறேம்.

அர்ஜுனன் :— நயத்தில் வராவிட்டால் சித்ரசேனனுள் பட யாவரும் இந்தக் காண்டீபத்திற்குத் தான் இறை யாகவேண்டும்.

தர்மபுத்ரர் :— நல்லது போய் ஒருவருக்கும் உபத்திரவ மில்லாமல் ஜயலக்ஷ்மியுடன்வந்து சேருங்கள்(போதல்)

அங்கம் 5. அரங்கம் 3.

இடம். ஒரு அகலமான வனப் பாதை.

காலம். முன் பகல்.

(வில்லும் பாணமுமாய் சித்ரசேனன்
பிரவேசித்து)

சித்ரசேனன் :— (பாடுதல்)

அகவல் மெட்டு

காம்போதி. ஆதி.

த்னகரகோடிதேஜஸ்ஸுடனே, திருக்கைகளிரண்டிலும் வில்
[பிடித்து
இனமாய் அவற்றைத்தான் வளைத்து,இருவிற்களிலும் நாணேற்றி
சத்துருசைன்யமதன்நடுவில், சாருஸரோருஹநேத்திரனாய்
சித்திரமான நடையுடனே, சிரித்த முகத்துடன் புகுந்திட்டால்
நிறபதிருப்பது தெரியாது, நேரில்போவது தெரியாது.

சுற்றியடிப்பது புரியாது, சுருண்டு வளைவது புரியாது
பாணமெடுப்பதை யார் கண்டார்? பரிந்து தொடுப்பதை யார்
[கண்டார்?
கோணமாய் விடுவதை யார் கண்டார்? குறிப்பாய் பாய்வதை
[யார் கண்டார்?
கோடி கோடியாய் சரங்கள் எழும்; கோடி விமானங்கள் அவற்
[றைத் தொழும்;
ஓடி ஓடியே ஆகாயம் பூமியெலாமது முழுதும் உழும.

நாழிகைப் பொழுதுக்குக்காணாது நாதனுக்கெத்தனை யானாலும்;
வாழி வாழி என்றீசன முதல் வானவர் யாவருமே புகழ
வெளிவருவானிந்தத்தனிவீரன் வேகமாய் வந்தந்த ஜானகியும்
களிமிகுந்தே கண்கள் மலரக் கட்டியணைந்து துதிப்பாளே!

இப்படி இருக்கும் அந்தமைதிலீவல்லபனுன ஸ்ரீ ராமன் பராக்கிரமம் என்று ஸ்ரீ ராமாயணத்தில் கேட்டதுண்டு. அந்த ஸ்ரீராமனை நினைக்கும்படிச் செய்கிருனே இவன் யாரோ ஒரு சுத்த வீரன்? யாரிவன் என்று இன்னம் புரிய வில்லையே? அத்தனைக் கந்தர்வ வீரர்களையும் பஞ்சாய்ப் பறக்க அடித்துவிட்டு வட்டமிடுகின்றனவே இந்த மகாத்மாவினது அஸ்திரங்களும் சஸ்திரங்களும். ஆ: என்ன பரமாச்சரியமிது!

(திரைக்குள்ளிருந்து ஒரு புறமாய்ப் பாணம்
சீறி வருவதைப் பார்த்து)

என்ன பாணம்! என்ன வேகம்! (பாடுதல்)

ஆரபி. ஆதி.

பல்லவி

என்ன பாண வேகமோ? என்ன அஸ்த்ர யோகமோ?
என்னையும் தூரத்தியதே!

அனுபல்லவி

சைன்ய சமுத்திரமெலாம் சட்டென்று வற்றியதே
தைன்யப்படத் தீரரைத்தள்ளிச் சுருட்டியதே! (என்ன)

சரணம்

இருகைகளிலும் விற்கள் ஏந்திச் சீராய் வளைத்து
வருவதும் போவதுமாய் பாணங்களை மழைபோல்
சொரியும் திறமை தர்மஸாரன் கல்யாணராமன்
வீரனர்ஜுன னிவ்விருவர்க்குத்தான் உண்டு. (என்ன)

இவன் ஏன் மறைந்து வேலை செய்கிறான்? நேரில் வருவதற்குக் கனவிலும் பயந்தவனைக் காணவில்லையே! இவனைப்பார்க்கவேண்டுமென்றிருக்கிறதே எனக்கு?

(பாணமும் கையுமாய் பீமசேனன் பின் தொடர அர்ஜுனன் பிரவேசித்து)

அர்ஜுனன் :—ஆ! என் நர்த்தனசாரியர் சித்ரசேனரோ? என்ன காரியம் செய்துவிட்டேன் நான்?

சித்ரசேனன் :— அர்ஜுனா! என் கண்மணியே! இது ஒரு தெய்வவிளையாட்டு. எனக்கிதில் வருத்தமில்லை. சுகந்த மலர்களால் நீ என்னைப் பூஜித்ததாகவே நான் நினைத்துவிட்டேன். ஆனாலும் இந்தக்கார்யம் நீ செய்யத்தக்கதல்ல. நாங்கள் உபகாரிகள். எங்களுக்கபகாரம் செய்ய நினைத்தது கூடத் தர்மபுத்ரர் தம்பிகளுக்குத் தகாது தகாது.

பீமசேனன் :— ஏதோ செய்துவிட்டோம். இனி என்ன செய்கிறது? எங்கள் அண்ணாதான் பிடிவாதமாய் எங்களை இதில் ஏவினார். அவர் வாக்கு எங்களுக்கு வேதமே அல்லவா?

அர்ஜுனன் :— நீங்கள் ஸ்திரீகளையும் வருத்துவது ரொம்பவும் அடாதகாரியம். அதனால் தான் நாங்கள் வரத் துணிந்தோம்.

சித்ரசேனன் :— போனது போகிறது. நான் என்ன செய்யவேண்டும்?

அர்ஜுனன் :— (பாடுதல்)

லாவணி.

1. சித்ரசேன! நீங்கள் நிற்பதை யறியாமல் சீறும் அஸ்திரங் [களை
பித்தன்போல் கொட்டினேன் பெரிய மனதுபண்ணி மன் [னிக்கவேண்டுமென. (சித்ர)

2. எத்தனையோ உபகாரம் எனக்கு நீங்கள் ஏகமாய்ச் செய்த [தற்கு
அத்தனைக் கத்தனையாய் ஆலோசிக்காமல் அபகாரங்கள் செய்திட்டேன். (சித்ர)

3. ப்ராணசகே! இதையெல்லாம் மறந்து புருஷோத்தமன் [ராமனைப்போல்
ப்ராணனுக்கும் ப்ராணமான பரம மித்ரனாய் நீங்கள் ஆக [வேண்டும்.

4. கல்யாணராமன் தெய்வமந்தக் கமல நயனனேயான கண் [ணன்.
கல்யாணங்களை இனி அனுக்ஷணமும் நமக்குக் கருணை யாய்த் தந்திடுக. (சித்ர)

துர்யோதனாதிகளை விடுவிக்க நாங்கள்வந்தது. விட்டாலும் விடாமற்போனாலும் எங்கள் அண்ணாவை எங்களுடன் வந்து நீங்கள் சமாதானம் செய்தாகவேண்டும். வரு கிறீர்களா?

சித்திரசேனன்.— இதோ வருகிறேன். நீங்கள் முந்திப் போங்கள். உங்கள் ஆச்ரமம் இப்போது தேவேந் திரன் க்ருபையால் இந்திர சபையாய் மாறியிருக்கும். போய் அழகாய் அண்ணாவுடன் தேவி சகிதமாய் அதை அலங்கரியுங்கள்.

(எல்லோரும் போதல்)

அங்கம் 5. அரங்கம் 4.

காலம். கோதூளி வேளை என்ற சந்த்யாகாலம்.

[பாண்டவர் ஆச்ரமம இந்திர சபையாய்க் காண்கிறது. தர்மபுத்ரர் சிம்மாசனத்தில் வீற்றிருக்க இருபுறமும் பீமசேனனும் த்ரௌபதியுமாய் நின்றுவெண்சாமரம் போடுகிருர்கள். அர்ஜுனன் வெண்குடை பிடிக்கிருன். நாரதர் ஒருபுறமும் மேனகை ஒருபுறமுமாய்ச் சபையில் காண்கிருர்கள். தேவ கந்தர்வர்கள் சபையை அலங்கரிக்கிருர்கள்.]

தர்மபுத்ரர் :— (நாரதரைப் பார்த்து) மகாமுனியே! எதற்கெனக்கிந்த சிறப்பெல்லாம்? நான் இந்த ஸ்தானத்திற்கு அருகனு?

நாரதர் :— தாங்கள் எதுக்கும் தகுந்தவர்கள். ஆனல் இதெல்லாம் உங்களுக்காக நடக்கவில்லை. த்ரௌபதி கனவுகாண, கண்ணனும் விதுரரும் என்னை ஏவ, நான் தேவேந்திரனை யாசிக்க, சித்ரசேனன் தேவேந்திரன் உத்தரவுப்படி நடக்க, எந்த நாடகம் இப்பொழுது நிகழ்கின்றதோ, அதற்குக் கதாநாயகனுன மகாப்ரபுவான துர்யோதன மகாராஜன் இப்பொழுது தங்கள் சன்னிதிக்கு விஜயம் செய்யப்போகிருர். அவர் பார்ப்பதற்கே இதெல்லாம் ஏற்பட்டது. அதோ சித்ரசேனன் வருகிருர். (பிரவேசித்து)

சித்ரசேனன் :—(தர்மபுத்ரரைப்பார்த்து) பூலோக மகேந்திர! ஜயவிஜயீபவ!

தர்மபுத்ரர் :— என்ன இதெல்லாம்? ஏன் நீங்கள் துர்யோதனுதிகளை விடுவிக்க வில்லையோ?

சித்ரசேனன் :— விடுவித்தாய்விட்டது. தேவேந்திரன் உத்திரவிற்காகக் காத்திருந்தேன். அவர் நீங்கள் எது சொன்னாலும் ஆலோசியாமல் செய்யவேண்டும் என்று சொல்லி அனுப்பிவிட்டார். உங்களிஷ்டத்தையும் பீமசேனார்ஜுனர்கள் சொல்லிவிட்டார்கள். எல்லோரையும் விடுவித்து மரியாதையாய் ஹஸ்தினபுரத்திற்கு அனுப்பிவிட்டு மகாராஜன் துர்யோதனனை மாத்திரம் கட்டவிழ்த்துவிட்டு நிறுத்தியிருக்கிறேன். (பார்த்து) இதோ வருகிறார் அவரும்.

(இருபக்கமும் சிப்பாய்கள் காவலுடன் துர்யோதனன் பிரவேசித்து சுற்றுமுற்றும் ஏற இறங்க வெறித்துப் பார்த்துப் பெருமூச்சு விட்டுக்கொண்டு பாடுதல்)

தோடி. ஆதி

பல்லவி

இதுவும் பாக்கி இருந்ததோ? க்ராக்கியில்லாமல் (இது)

அனுபல்லவி

மதுவோ கற்கண்டோ இது? மாக்ஷிமையோ எனக்கு?
மதுரமான ஸேவையோ மயக்கிடு மிந்தக்காக்ஷி? (இது)

சரணங்கள்

1. என் பெருமையைக் காட்ட ஏற்பாடாக நான் வந்தேன்.
என்ன பொல்லாவிதியோ எனை ஏளனம் செய்ததே?
மன்னர் யார்க்குமில்லாத மகிமையோடண்ணன் வாழ
மன்னிப்புக் கேட்க வெட்கமின்றி நானுமே தாழ, (இது)

2. இந்த்ர சிம்மாசனமோ இந்த யுதிஷ்டிரர்க்கு?
மந்திபோல் நானுமிங்கு முந்தி நிற்கலாயிற்றே!

சுந்தரி த்ரௌபதியும் சுப்ரமாய் நகைத்திட
அந்தமாயக் கல்யாணராமன் இதையும் பாட. (இது)

தர்மபுத்ரர் :— (துர்யோதனனைப்பார்த்து) துர்யோதனா! வா! அந்தப் பீடத்தில் உட்காரு? ஏனிப்படி எல்லாம் செய்கிறாய்?

சித்ரசேனன் :— மகாப்ரபோ! உங்கள் அந்யாயமான கருணை இம்மாத்ஸர்யகிதியை மறுபடி மூச்சுவிடச் செய்துவிட்டது. அன்றேல் இன்னேரம் தேவலோகத்து ஆழத்தில் அந்தகாரத்தில் விட்டெறிந்திருப்போம். அதற்கடிகிடையாது. கீழே சரசர வென்று விழுந்துகொண்டே இருக்க வேண்டியது தான் கல்பகாலம் வரையில்.

தர்மபுத்ரர் :— சித்ரசேனா! போதும். அவன் ஏறக்னவே நொந்துபோய் இருக்கிறான். இனி புத்தியாய் இருப்பான்.

நாரதர் :— பெண்ணே மேனகாய்! அந்தப் பாட்டைப் பாடு பார்ககலாம்.

மேனகை :— (சபை நடுவடைந்து பாடுதல்)

சுருட்டி. ஆதி.

பல்லவி

தர்மநந்தனனையும் துர்யோதனனையும் நான்
சேர்த்து சொகுசாய்ப்பாடிச் சபையை ரஞ்சித்திடுவேன். (தர்ம)

அனுபல்லவி

தர்மநந்தனன் பொறுமைக்கு நிதியாய் வாழ்ந்தால்
துர்யோதனன் பொறாமை தனக்கிடமாகத் தாழ்வார். (தர்ம)

சரணங்கள்

1. அண்ணனை யவமானம் செய்ய அருகில் வந்து
கண்ணில் உதிரம் வரத் துர்யோதனன் துடிப்பார்.
கண்ணைத் துடைத்தவரைக் கனப்படுத்தியவ்வண்ணன்
மண்ணையாளவேசீராய் மறுபடி அனுப்புவார். (தர்ம)

2. கல்யாணராமனிதைக் கௌரவகர்வபங்க
மல்லது கோஷயாத்ரை என்ற நாடகமாக
நல்ல வேளையில் செய்து நலமாய் நடித்துக்காட்டி
மெல்லிருகமணிநாதன் மேலாம் அருள் பெறுவான். (தர்ம)

தர்மபுத்ரர் :— சமயோசிதமாயும் அழகாயு மிருக்கிறது இந்தகானம்; சித்ரசேனா! துர்யோதனன் பூமண்டல சக்ரவர்த்தி யாதலால் பெருமைாய் அனுப்பிவிட்டு மருகாரியம் பாருங்கள்.

சித்ரசேனன் :— அப்படியே! (துர்யோதன னுடன்போதல். சற்று நேரத்திற் கெல்லாம் திரும்பி வருதல்)

தர்மபுத்ரர் :— சித்ரசேனா! ஸர்வமங்களங்களையும் மகேந்திரனும் உங்களாலும் ஸாக்ஷாத் கண்ணனும் அடைந்தோம். நான் என்ன உங்களுக்குப் பதில் செய்ய முடியும்?

சித்ரசேனன் :— ஒன்றும் வேண்டாம். நான் உங்களுக்கு எதுவும் செய்யக் கடமைப்பட்டவன். உங்களைப் புகழ யாரால் முடியும்? நாரத ஸ்வாமின்! மங்களா சாஸனம் செய்யுங்கள்.

நாரதர் :— (கைதூக்கி ஆசீர்வதித்து) ஸர்வமங்களாநி ஸந்து. ஸர்வேஜநா: சுகிநோ பவந்து. அரோகத்ருட காத்ர சித்திரஸ்து. (பாடுதல்)

(மங்களம்)

லக்ஷ்மீ ஸமேதருக்கும் கௌரீமனோஹார்க்கும்
வாணீபதிக்கும் ஜய மங்களம்.
லக்ஷ்மீ விலாஸமுள்ள லக்ஷண நூல்களுக்கும்
லலித கவிகளுக்கும் மங்களம்.
மங்களம் ஜய மங்களம் மங்கள ரூபனான
மன்னன் ஸ்ரீ ராமனுக்கும் மாயவன் கண்ணனுக்கும்
மங்களம்.
மங்களம் சுபமங்களம் மானிதமான இந்த
நாடகத்திற்கும் கவி கல்யாண ராமனுக்கும் மங்களம்.
நித்ய கல்யாணங்களும் நித்ய மங்களங்களும்
ஸத்யமயமாய் நிலைநிற்கட்டும்.

ஸ்ரீ ஸீதா லக்ஷ்மண பரதசத்ருக்ன ஹனுமத்ஸமேத ஸ்ரீராம
சந்த்ர பரப்ருஹ்மணே நம:

ஸ்ரீ ருக்மணீ ஸத்யபாமா ஸமேத ஸ்ரீ கோபால க்ருஷ்ண
பரமாத்மனே நம:

ஐந்தாவது அங்கம் ஸம்பூர்ணம்

67885

இந்நாடகமும் பரிபூர்ணம்.

ஸ்ரீ:

Kesari Printing Works, G. T., Madras.

0-,2MKS.G